

2006

# கலைமாமணி விருது

## வழங்கும் விழா




314

**சிறப்பு மலர்**

00206

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்களிடம்
தலைவர் **இராம. நாராயணன்** அவர்களும்
உறுப்பினர்-செயலாளர் கவிஞர் **இளையபாரதி**
அவர்களும் வாழ்த்து பெற்ற போது...






2006

# கலைமாமணி விருது

வழங்கும் விழா



# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

## (கலை பண்பாட்டுத் துறை)

பொன்னி, 31, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை, சென்னை - 600 028.

314



2006

# கலைமாமணி விருது

வழங்கும் விழா

01.09.2007

கலைவாணர் அரங்கம், சென்னை - 600 002



மேதகு தமிழக ஆளுநர்

திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

# திரு. கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

**தனிமரம் தோப்பாகாது என்று சொல்வார்கள். ஆனால் இங்கே ஒரு தனிமனிதனே வனமாகி தன் எழுத்துக்களால் சமூகத்துக்குப் பசுமை சேர்த்துக் கொண்டிருக்கிறான். எழுபது ஆண்டு காலமாக ஓயாது உழைக்கும் உதயசூரியன் போல் தமிழ் இலக்கியத்திற்கு பச்சையம் வழங்கிக் கொண்டிருக்கிறான்.**

- கலாப்ரியா

மதுரை கலைஞர் படைப்பரங்கின் திறப்பு விழாவில் பேசியது...



## கனவுகள் மெய்ப்படுதலின் தொடக்கம்

41வது கலைமாமணி விருது வழங்கும் விழா சிறப்பு மலருக்காக இந்தக் குறிப்புகளை நான் எழுதக் காரணமாக இருந்த முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி என் இதயம் நன்றியறிதலோடு பணிந்து வணங்குகிறது. அவரை வணங்காவிடல் என் இதயம் வேறு யாரை வணங்கும்? முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்ற பிறகு தமிழகத்தின் எல்லாத் துறைகளும் வெளிச்சமும், புதிய வேகமும் பெற்றிருப்பதைப் போல தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும் புதிய வீறும், புதிய பொலிவும் பெற்று தீவிரமாக இயங்கி வருவது தமிழ் கூறும் நல்லுலகிலுள்ள கலைஞர்களும், கலை ஆர்வலர்களும் அறிந்ததே. சமூக விஞ்ஞானி என்று கொண்டாடப்படும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இலக்கியத்திற்காக சாகித்ய அகாடெமியையும், ஓவியத்திற்காக லலித் கலா அகாடெமியையும், சங்கீதத்திற்காகவும், நாட்டியத்திற்காகவும் சங்கீத நாடக அகாடெமியையும் துவக்கி, அது தமிழகத்தில் சங்கீத சங்கம் என்ற பெயரில் செயல்பட்டு வந்த வேளையில் முத்தமிழின் வடிவாக இருக்கும் முதல்வர் கலைஞர் அவர்கள்தான் இந்த அமைப்புக்கு இயல் இசை நாடக மன்றம் என்ற இனிய, அழகிய, பொருத்தமான பெயரைச் சூட்டினார்கள். இந்த அமைப்பிற்கு யார் இயல் இசை நாடக மன்றம் என்று பெயர் சூட்டினாரோ அவருடைய ஆட்சிக் காலத்திலேயே இந்த மன்றம் தற்போது தன்னுடைய பொன்விழாவை விரைவில் கொண்டாட இருக்கும் வேளையில் இந்தக் கலைமாமணி விருது வழங்கும் விழா நிகழ்ந்தேறுகிறது. இயல் இசை நாடக மன்றம் என்பது இசை, நாடகம் மற்றும் கலைக்கான ஒரு சம்பிரதாய அமைப்பாக இல்லாமல், 'மக்கள் கலை'களை மக்களிடம் கொண்டு செல்கின்ற ஒரு கலாச்சார அணியாக மாறி இருக்கிறது. இப்படி சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்த முதல்வர் கலைஞர் அவர்களுக்குத்தான் மறுபடியும் நாம் நன்றி சொல்பவர்களாக இருக்கின்றோம். நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற அந்த மேடையிலேயே தேர்தல் வாக்குறுதிகளாகச் சொன்ன, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, விவசாயிகள் கடன் ரத்து என முதல் மூன்று கையெழுத்துக்களைப் போட்டு ஏழைகளின் வயிற்றில் மட்டுமல்லாமல் இதயங்களிலும் பால் வார்த்தார்கள். அதைப் போலவே நலிந்த கலைஞர்களுக்கான நிவாரண நிதி ரூ.500/- லிருந்து ரூ.1000/-ஆக உயர்த்த உத்தரவிட்டார்கள். முந்தைய ஆட்சியில் இருந்தவர்கள் ரூ.500/-என்று இருந்ததை ரூ.750/- ஆக உயர்த்தித் தருகிறேன் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்கள் பதவியிலிருந்து இறங்குகின்ற கடைசி நிமிடம் வரை அந்தக் கோப்பில் கையெழுத்திடாமல், ஏழை எளிய கலைஞர்கள், பரிதாப நிலையில் இருந்த அந்தப் பாவப்பட்டவர்களை, அவர்களுடைய ஏக்கங்கள் அடங்கிய கோப்புகளைக் குப்பையில் போட்டுவிட்டு பதவியிலிருந்து இறங்கிச் சென்றார்கள். ஆனால் முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற சில தினங்களிலேயே இந்த நலிந்த கலைஞர்களின் கோப்பினைத் தூசி தட்டி எடுத்து,நலிந்த கலைஞர்களுக்கான நிவாரண நிதியை ரூ.500/-லிருந்து ரூ.1000/- ஆக உயர்த்தி, துயரத்தின் வாயிலில் நின்ற கலைஞர்களுக்காக, முதுமையின் விளிம்பிலும், நிராதரவின் உச்சத்திலும் உழன்ற அந்தப் பசித்த மானுடத்துக்குத் தாயினும் சாலப் பரிந்து தகுந்த நேரத்தில் உத்தரவிட்டார்கள். ஏனென்றால் அவர் பசியை அறிந்தவர். கண்ணீரை அறிந்தவர். காயங்களை அறிந்தவர். வலியை உணர்ந்தவர். வறுமையை உணர்ந்தவர். ஆதலால் இந்த ஏழை எளிய கலைஞர்களின் இதயக் குமுறலை உடனடியாக உணர்ந்து இந்த உத்தரவைப் பிறப்பித்தார்கள்.

அதைப்போலவே இன்னொரு நிகழ்வைக் குறிப்பிடவேண்டும். நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி அவர்கள் நாட்டுப்புறக் கலைகளை எல்லாம் ஒன்றுதிரட்டி சென்னை சங்கமம் என்ற எழுச்சிகரமான கலைவிழாவை நடத்தினார்கள். அதில் இயல் இசை நாடக மன்றமும் தன்னுடைய பங்கை ஆற்றியது. சென்னை சங்கமம் என்ற அந்த நிகழ்வு பெரும் வெற்றி அடைந்ததும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் தன் பங்குக்கு நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஓர் நல வாரியம் அமைக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கைப் பேரணியை நடத்தியது. பேரணி நடந்த இரண்டாவது நாளே சட்டப்பேரவையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வைத்த கோரிக்கையை ஏற்று இந்த அரசு நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான நல வாரியத்தை அமைக்கின்றது என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இது எப்படி சாத்தியமாயிற்று? சாதாரண ஏழை எளிய மக்களின் குரலுக்கு செவிசாய்க்கும் ஒரு அரிய மனிதர் கோட்டையிலே அமர்ந்துள்ளதால், கோரிக்கை வைத்த ஓரிரு தினங்களிலேயே கோரிக்கை ஏற்கப்பட்டு வாரியமும் அமைக்கப்பட்டு, அதற்கான செயல்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றது. இந்த

நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் என்பது அந்த நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்க்கையில் கிடைத்த வெளிச்சம் என்று சொல்லலாம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலம் தமிழர்களுக்கு பொற்காலம். குறிப்பாக கலைஞர்களுக்கு இதுதான் பொற்காலம். கலைத்துறைக்கு வாரி வாரி வழங்குகின்ற உண்மையான வள்ளல் நம்முடைய கலைஞர் அவர்கள்தான். முதல்வர் கலைஞர் அவர்களிடம் இயல் இசை நாடக மன்றத்தின் சார்பாக நாம் வைத்த பின்வரும் கோரிக்கைகளை எல்லாம் ஏற்று ஆணையிட்டுள்ளார்கள்.

**அ. ஆவணப்படம் தயாரித்தல்**

தமிழ் இசை மரபு பற்றிய ஓர் ஆவணப்படம் தயாரிக்கப்படும். இதில் சீர்காழி மூவரிலிருந்து ராஜரத்தினம் பிள்ளை வரையிலான வரலாற்றைச் சித்தரிப்பதாக இது அமையும்.

**ஆ. முத்தமிழ் முகாம்**

பூனா திரைப்படக் கல்லூரியில் ஆண்டுதோறும் கோடை விடுமுறையில் திரைப்பட ரசனைப் பயிற்சி வகுப்பு நடத்துவது போல், இயல், இசை, நாடகத்திற்கான முகாம் ஒன்றை மூன்று தலைமுறைகளிலும் உள்ள சிறந்த கலைஞர்கள், படைப்பாளிகளைக் கொண்டு நடத்தப்படும்.

**இ. நாடகக் கலைஞர்களின் புகைப்படம், குரல்கள் மற்றும் நாடக நிகழ்வுகளைச் சேகரித்துத் தொகுத்து ஆவணமாக்கிப் பாதுகாத்தல்**

நாடகக் கலை குறித்து இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும்பொருட்டு, நாடகக் கலையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களைப் பற்றிய விவரத்தினைச் சேகரித்து, ஆவணமாக்கிப் பாதுகாக்கப்படும். நாடகக் கலைஞர்களின் புகைப்படங்கள், கலைஞர்களின் குரல்கள் மற்றும் நாடக நிகழ்வுகளைப் பதிவு செய்து பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் புகழ்பெற்ற கலைஞர்கள் பயன்படுத்தும் ஆடை அணிகலன்கள், மேடைப் பொருட்கள், காட்சி அமைப்புகளையும் சேகரித்துப் பாதுகாத்து பார்வையாளர்கள் காணும்வண்ணம் காட்சிப் பொருளாக வைக்கப்படும்.

**ஈ. இந்திய அளவில் புகழ்பெற்றக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல்**

தமிழகத்தைச் சேர்ந்த கலைஞர்களுக்கு விருது வழங்குவது போல், அகில இந்திய அளவில் புகழ்பெற்ற கலைஞர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் தமிழக அரசின் சார்பில் விருதுகள் வழங்கப்படும்.

**உ. கலைஞர்கள் / கலைக்குழுவினர் தங்குவதற்குத் தகுந்த விருந்தினர் இல்லத்தை மன்ற வளாகத்தில் கட்டுதல்**

பல்வேறு கலைப்பணிகள் குறித்து சென்னைக்கு வருகை தரும் அனைத்து தரத்துக் கலைஞர்களுக்கும் தங்குவதற்கு உகந்தவாறு மன்ற வளாகத்தில் 3000 சதுர அடியில் ஒரு கட்டடம் கட்டுவதற்கு ஆவனச் செய்யப்படும்.

**ஊ. நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தில் 2007 - 2008 ஆம் நிதியாண்டில் புதிதாக 500 கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்**

கடந்த (2006-2007) நிதியாண்டின் மானிய கோரிக்கையின்போது புதிதாக 500 நலிந்த கலைஞர்களுக்கு அவர்கள் வாழ்நாள் வரை திங்கள்தோறும் ரூ.1000/- வீதம் நிதியுதவி வழங்க அறிவிப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து 500 கலைஞர்களுக்கு நிதியுதவி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது. அதேபோல் நடப்பு (2007 - 2008) நிதியாண்டில் புதிதாக 500 நலிந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் தலா ரூ.1000/- வீதம் நிதியுதவி ஒப்பளிக்க ஆவணச் செய்யப்படும் என அறிவித்துள்ளார்கள்.

சகல தரப்பு எளிய மக்களுக்கும் நன்மைகளைச் செய்து வருகின்ற கலைஞர் அவர்களின் அரசுக்கு ஆதரவாக சகல கலைஞர்களையும் திரட்டுவதே இயல் இசை நாடக மன்றத்தின் தலையாய பணி. கடந்த ஓர் ஆண்டு கால நிகழ்வுகள் அதனை நிரூபித்துள்ளன. நாளைய பணியும் அவ்விதமே அமையும். முத்தமிழும் கலைஞருக்குள் அடக்கம். அவரின் ஒவ்வொரு கையெழுத்தும் ஏழைக் கனவுகள் மெய்ப்படுதலின் தொடக்கம்.

**கவிஞர் இளையபாரதி**
உறுப்பினர்-செயலாளர்

# கலைமாமணி கலைஞர்



*22.4.1967 அன்று அண்ணாவின் அன்புக் கரங்களால் கலைமாமணி விருது பெறும் முதல்வர் கலைஞர் அவர்கள்*

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஆண்டுதோறும் சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து விருதுகள் வழங்கி ஊக்கமூட்டும் பணியினை விடாது செய்து வருகிறது. அந்த ஆண்டு திரைப்படத் துறையில் சிறந்த வசனகர்த்தா விருதுக்கு என்னைத் தேர்ந்தெடுத்தார்கள்.

கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் தலைமையில் விருது வழங்கும் விழா 22.4.67 மாலை சென்னை ராஜாஜி மண்டபத்தில் நிகழ்ந்தது.

அவ்வை டி.கே. சண்முகம் அவர்கள் கலைஞர்களை அறிமுகப்படுத்திட, அண்ணா அவர்கள் விருதுகளை வழங்கினார்கள்.

என்னுடைய முறை வந்து பெயர் அறிவிக்கப்பட்டு நான் எழுந்து சென்றபோது எனக்குரிய விருதை உடனே என்னிடம் அளித்திடவில்லை, அண்ணா, தாமே அந்த மாலையை அணிந்து கொண்டார். தன் உயிருக்குயிரான சேயிடம் வேடிக்கை காட்டிடும் தாயைப் போலவே அண்ணா விருதணிந்து நின்றிட்ட அந்த வியத்தகு கோலத்தைக் கண்டு ராஜாஜி மண்டபமே ஆரவாரத்தால் அதிர்ந்தது. சில நொடிகள் சென்ற பின்னர் அந்த மாலையை எடுத்து எனக்கு அணிவித்தார்.


''... கலைஞர் கருணாநிதி அவர்கள் கலையில் ஈடுபாடு கொண்டு எதையும் நேர்த்தியாகச் செய்வது போலவே, ஆட்சியிலும் கலையின் நேர்த்தியினை இணைத்துக் காரியமாற்றி முன்னேற்றம் கண்டிருக்கிறார். அப்படிப்பட்டவர் விருது பெறுவதால் நான் தனிப்பட்ட முறையில் பெருமை அடைவதை நீங்கள் அனுமதிப்பீர்கள் என்று நம்புகிறேன்'' என்று உளந்திறந்து அப்போது அண்ணா பாராட்டினார்.

நன்றியுரை நவின்றிட்ட நான்,


''... கடந்த மார்ச் 6ஆம் நாள் பொதுப்பணித்துறை அமைச்சராக இதே மண்டபத்தில் நான் உறுதிமொழி எடுத்துக்கொண்ட அந்த நாளைவிட விருது பெற்ற இந்த நாளை நான் பெருமைக்குரிய நாளாகக் கருதுகிறேன். எல்லாவற்றுக்கும் மேலாகப் பாசமுள்ள அண்ணனின் கையால் விருது பெற்றிருக்கிறோம் என்பதை எண்ணுகிற நேரத்தில் உள்ளபடியே நான் பெருமையடைகிறேன்'' - என்று குறிப்பிட்டேன்.

அண்ணாவை அடுத்து நான் முதலமைச்சர் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பின்னர் நண்பர் எஸ்.டி. சுந்தரம் அவர்களைச் செயலாளராகக் கொண்டு இயங்கும் அந்த சங்கீத நாடக சங்கமே பிறகு இயல் இசை நாடக மன்றம்'' என மூன்று தமிழையும் வளர்க்கக் கட்டமைக்கப்பட்டது என்கிற வகையில் புதுப்பெயரினை, தமிழ்ப் பெயரினைப் பூண்டது.

'நெஞ்சுக்கு நீதி'யில் முதல்வர் கலைஞர் அவர்கள்.




**இராம. நாராயணன்**
தலைவர்



**கவிஞர் இளையபாரதி**
உறுப்பினர்-செயலாளர்



**த. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப.
துணைத் தலைவர்



**சீ. இராதாக்கண்ணன்**
பொருளாளர்

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றப் பொறுப்பாளர்கள்

| | |
|---|---|
| தலைவர் | இராம. நாராயணன் |
| துணைத்தலைவர் | த. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப. |
| பொருளாளர் | சீ. இராதாக்கண்ணன் |
| உறுப்பினர்-செயலாளர் | கவிஞர் இளையபாரதி |
| நிதித்துறை இணைச் செயலாளர் | பி. கிருஷ்ணமூர்த்தி |

## பொதுக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திருமதி. சாரதா நம்பி ஆரூரான் | திருப்பாம்புரம் திரு.சோ. சண்முகசுந்தரம் |
| கவிஞர் திரு. ஈரோடு தமிழன்பன் | ஆர்.வி. கிருஷ்ணன் |
| க. திருநாவுக்கரசு | வழுவூர் வி. ரவி |
| திருவாளப்புத்தூர் திரு.டி.ஏ. கலியமூர்த்தி | திருமதி. ஆர். முத்தரசி |
| திருமதி நித்யஸ்ரீ மகாதேவன் | என்.எஸ். வரதராஜன் |
| திருமதி ஸ்ரீ கலா பரத் | எஸ்.டி. இதயவேந்தன் |
| கவிஞர் சுப்பு ஆறுமுகம் | ஆர்.டி.எஸ். நெடுமாறன் |
| திருமதி ஸ்ரீப்ரியா | எஸ். சவுண்டப்பன் |
| குமரிமுத்து | கே.என். காளை |

## அலுவலர்கள்

| | |
|---|---|
| ச. இராமசாமி | உதவிச்செயலாளர் |
| சி. பாலகிருட்டிணன் | கண்காணிப்பாளர் |
| வை. பாலசுப்பிரமணியன் | சிறப்புநிலை உதவியாளர் |
| நா. ஜெயக்குமார் | கணக்காளர் |
| க.சி. ஜானகிராமன் | உதவியாளர் |
| இரா. ஜனார்த்தனன் | தேர்வுநிலை சுருக்கெழுத்து-தட்டச்சர் |
| கு. பாகீரதி | தேர்வுநிலை இளநிலை உதவியாளர் - தட்டச்சர் |
| சு. மந்திரமூர்த்தி | இளநிலை உதவியாளர் |
| வெ. புவனேசுவரி | தொழில்நுட்பர் |
| ஆ. ஜோசப்ராஜ் | தேர்வுநிலை அலுவலக உதவியாளர் |
| த. பழனிவேலு | இரவுக் காவலர் |

# கலைமாமணி விருது - 2006
# கலைஞர்களின் பட்டியல்

**இயல்**

| | |
|---|---|
| பாலகுமாரன் | எழுத்தாளர் |
| வண்ணதாசன் | எழுத்தாளர் |
| கவிஞர் கலாப்ரியா | கவிஞர் |
| சுப வீரபாண்டியன் | இலக்கியப் பேச்சாளர் |
| திரு.மரபின்மைந்தன் முத்தையா | இலக்கியப் பேச்சாளர் |
| முனைவர் இரா. செல்வக்கணபதி | சமய சொற்பொழிவாளர் |
| ஆர்.பி. நாயுடு | சமய சொற்பாழிவாள |

**இசை**

| | |
|---|---|
| கீதா ராஜசேகர் | இசை ஆசிரியர் |
| சஞ்சய் சுப்ரமணியன் | குரலிசைக் கலைஞர் |
| கே. ஶ்ரீவத்சா | மிருதங்கக் கலைஞர் |
| திருமதி. சரஸ்வதி இராஜகோபாலன் | வீணைக் கலைஞர் |
| இறையன்பன் குத்தூஸ் | இறையருட் பாடகர் |
| இஞ்சிக்குடி இ.எம்.சுப்ரமணியன் | நாதஸ்வர கலைஞர் |
| மலைக்கோட்டை எஸ். சுப்பிரமணியன் | தவில் கலைஞர் |

**பரதநாட்டியம்**

| | |
|---|---|
| திருமதி. கிரிஜா பக்கிரிசாமி | பரதநாட்டிய ஆசிரியர் |
| திருமதி. நளினி பாலகிருஷ்ணன் | பரதநாட்டிய ஆசிரியர் |
| திருமதி. பத்மா சம்பத் குமாரன் | பரதநாட்டியக் கலைஞர் |
| டாக்டர் சிந்தூரி | பரதநாட்டியக் கலைஞர் |
| செல்வி திவ்யா கஸ்தூரி | பரதநாட்டியக் கலைஞர் |
| திருநங்கை நர்த்தகி நடராஜ் | நாட்டிய-நாடகக் கலைஞர் |
| திருமதி.ஆர். முத்தரசி | நாட்டிய - நாடகக் கலைஞர் |

**நாடகம்**

| | |
|---|---|
| கவிஞர் இன்குலாப் | நாடக ஆசிரியர் |
| பேராசிரியர் இராசு | நவீன நாடக இயக்குநர் |
| ஆர்.தங்கராஜ் (எ) எம்.எல்.ஏ. தங்கராஜ் | நாடக நடிகர் |
| திருச்சி வி.மூர்த்தி | நாடக நடிகர் |
| திருமதி. ஜி. தேவிப்ரியா (எ) ரமணதேவி | நாடக நடிகை |
| திருமதி. வி.ஆர். திலகம் | பழம்பெரும் நாடக நடிகை |

**திரைப்படம்**

| | |
|---|---|
| கோவைத்தம்பி | திரைப்படத்தயாரிப்பாளர் |
| சீமான் | திரைப்பட இயக்குநர் |
| ஆர். பார்த்திபன் | திரைப்பட நடிகர் |
| சிம்பு (எ) சிலம்பரசன் | திரைப்பட நடிகர் |
| ஜெயம் ரவி | திரைப்பட நடிகர் |
| ஜீவா | திரைப்பட நடிகர் |
| விஷால் | திரைப்பட நடிகர் |

| | |
|---|---|
| செல்வி. த்ரிஷா | திரைப்பட நடிகை |
| செல்வி. நவ்யா நாயர் | திரைப்பட நடிகை |
| கஞ்சா கருப்பு | திரைப்பட நகைச்சுவை நடிகர் |
| செல்வி ஆர். ஆர்த்தி | திரைப்பட நகைச்சுவை நடிகை |
| வினித் | திரைப்பட குணசித்திர நடிகர் |
| திருமதி. சி.ஐ.டி. சகுந்தலா | பழம்பெரும் திரைப்பட நடிகை |
| பாலா | திரைப்பட கதாசிரியர் |
| பா. விஜய் | திரைப்பட பாடலாசிரியர் |
| நா. முத்துக்குமார் | திரைப்பட பாடலாசிரியர் |
| கபிலன் | திரைப்பட பாடலாசிரியர் |
| வித்யாசாகர் | திரைப்பட இசையமைப்பாளர் |
| திப்பு | திரைப்பட பின்னணிப் பாடகர் |
| மது பாலகிருஷ்ணன் | திரைப்பட பின்னணிப் பாடகர் |
| திருமதி. பாம்பே ஜெயஸ்ரீ | திரைப்பட பின்னணிப் பாடகி |
| எம்.வி. பன்னீர்செல்வம் | திரைப்பட ஒளிப்பதிவாளர் |
| ஆர்.விட்டல் | திரைப்பட எடிட்டர் |
| து. அதிவீர பாண்டியன் | திரைப்பட பத்திரிகை ஆசிரியர் |
| நேஷனல் செல்லையா | திரைப்பட புகைப்படக் கலைஞர் |

**இசை நாடகம்**

| | |
|---|---|
| வி.பி. ஜெகநாதன் | இசை நாடக நடிகர் |
| திருமதி. சீதாலட்சுமி (எ) ஜி.எம். சித்திரைச்செல்வி | இசை நாடக நடிகை |

**கிராமியக் கலை**

| | |
|---|---|
| எஸ். பெரியசாமி நாட்டார் | கரகக் கலை ஆசிரியர் |
| திருமதி. கே. அம்மச்சி | கரகாட்டக் கலைஞர் |
| ஆக்காட்டி ஆறுமுகம் | நாட்டுப்புற இசைக் கலைஞர் |
| முனைவர் க.அ. குணசேகரன் | நாட்டுப்புற இசை ஆய்வாளர் |

**சின்னத்திரை**

| | |
|---|---|
| வேணுஅரவிந்த் | சின்னத்திரை நடிகர் |
| போஸ் வெங்கட் | சின்னத்திரை நடிகர் |
| மௌனிகா | சின்னத்திரை நடிகை |
| கே. பாலாசிங் | சின்னத்திரை குணசித்திர நடிகர் |
| செல்வி. தீபா வெங்கட் | சின்னத்திரை குணசித்திர நடிகை |
| சி.ஜெ. பாஸ்கர் | சின்னத்திரை இயக்குநர் |
| விடுதலை | சின்னத்திரை கதைவசனகர்த்தா |
| டி.ஜி.பி. தியாகராஜன் | சின்னத்திரை தயாரிப்பாளர் |

**இதர கலைத்துறை**

| | |
|---|---|
| எம்.டிராட்ஸ்கி மருது | ஓவியக் கலைஞர் |
| அலெக்ஸ் | தந்திரக் காட்சிக் கலைஞர் |

# சிறந்த கலை நிறுவனம்
# முத்தமிழ்ப் பேரவை



**இயக்குநர் திரு. பி. அமிர்தம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழிகாட்டு தலின்படி 1974ஆம் ஆண்டு முத்தமிழ்ப் பேரவை என்ற தமிழ் இசை அமைப்பு வழுவூர் ராமையா பிள்ளை இல்லத்தில் துவங்கப்பட்டது. இதன் தலைவர்களாக, செயலாளர்களாக நாதசுரக் கலைஞர்கள் குளிக்கரை பிச்சையாப் பிள்ளை,

திருவெண்காடு சுப்பிரமணியப் பிள்ளை, திருவீழிமிழலை சகோதரர்கள், இசைக் கலைஞர்கள் சிதம்பரம் ஜெயராமன் பிள்ளை, மதுரை சோமு, இசையமைப்பாளர் டி.ஆர். பாப்பா, தஞ்சை டி.எம். தியாகராஜன், நடன ஆசிரியர் வழுவூர் ராமையா பிள்ளை மற்றும் பலர் இதன் நிர்வாகிகளாக இருந்துள்ளனர். குறிப்பாக இசைத்துறையைச் சார்ந்த கலைஞர்களால்உருவாக்கப்பட்டது இப்பேரவை. இப்பேரவையின் செயலாளராக தற்போது இயக்குநர் திரு.பி. அமிர்தம், பொருளாளராக திரு.ஈ.வி. ராஜன் இருந்து சிறப்பாக நடத்தி வருகின்றார்கள். இந்த அமைப்பின் சார்பில் நடைபெறும் இசை விழாக்களில், முன் வரிசையில் அமர்ந்து அந்தக் கால மாமேதைகள் வீணை பாலசந்தர், நாட்டிய மேதை பாலசரஸ்வதி, எம்.எஸ். சுப்புலட்சுமி, எம்.எல். வசந்தகுமாரி, செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் ஆகியோர் வெளியூரிலிருந்து வந்து நிகழ்ச்சி செய்யும் கலைஞர்களைப் பாராட்டுவார்கள்.

தொடர்ந்து 32 ஆண்டுகளாக ஜனவரி மாதத்தில் இசைவிழாவை நடத்தி வருகிறது. நாதசுர தவிலிசை மற்றும் தமிழிசைக்கு முக்கியத்துவம் அளிக்கும் பேரவையாக விளங்குகிறது. இவ்விழா, பேரவை தொடங்கியது முதல் யோகலட்சுமி திருமண மண்டபத்தை இலவசமாக அளித்து விழா நடத்த உறுதுணையாக இருந்தவர் மறைந்த நடிகை ஈ.வி. சரோஜா அவர்கள்.

இவ்வமைப்பின் சார்பில் திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம்பிள்ளை நினைவாக ‘ராஜரத்னா’ என்ற விருதை பாரத ரத்னா விருதுக்கு இணையாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டு, சிறந்த நாதசுரக் கலைஞர்களுக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

நாதசுரச் செல்வம், இசைச் செல்வம், இயல் செல்வம் போன்ற விருதுகளை வருடா வருடம் வழங்கப்பட்டு வருகிறது, இயல் துறைக்கும், நாதசுரத் துறைக்கும் தொடர்ந்து வழங்கும் ஒரே அமைப்பு என்ற பெருமையைப் பெற்றது.

32 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இசைவிழாவில் தொடர்ந்து தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு சிறந்த கலைஞர்களுக்கு விருது வழங்கி வருவது என்பது எந்த அமைப்புக்கும் இல்லாத பெருமை இப்பேரவைக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.



ஓராண்டுப் பணிகளின் பதிவுகள்
பணிகளின் பதிவுகள்
1 Year
மாண்புமிகு தமிழக முதல்வர்
கலைஞர் அவர்களுக்கு
நன்றி தெரிவிக்கும் மாபெரும்
நாட்டுப்புறக் கலை விழா
TAMIL NADU EYAL ISAI NATAKA MANRAM
CHENNAI - 600 028
(On behalf of the Government of Tamil Nadu)
SANGEET NATAK AKADEMI
NEW DELHI
Cultural Programmes
சென்னை சங்கமம்
திருவிழா. நம்ம தெருவிழா
பிப்ரவரி 20-26, 2007
மதுரை 2வது புத்தகத் திருவிழா 2007ல்
கலைஞர்
தமிழ்ச் சங்கமம்
பிப்ரவரி 21 முதல் 25 வரை
பிலிம் சேம்பர் திரை அரங்கு
அண்ணா சாலை
கோவை புத்தகத் திருவிழா 2007
ஓராண்டுப் பணிகளின் பதிவுகள்
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலை பண்பாட்டுத் துறை)
செல்வ சந்திரா
பெண் விடுதலை தினம்
ஐம்பெரும் விழா
இன்குலாப் நாடக விழா
கலைஞர் படைப்பரங்கம்
எழுபதாண்டு கால
எழுத்துக்களின் தொகுப்பு
2006
கலைமாமணி விருது
1.09.2007 சனிக்கிழமை
மாலை 6.00 மணி
கலைவாணர் அரங்கம்
பணிகளின் பதிவுகள்
1 Year


# பெண்கள் கவியரங்கம்











# ஐம்பெரும் விழா









# ஐம்பெரும் விழா



















பழங்குடியினர், மலைவாழ் மக்கள் மற்றும் பொம்மலாட்டக் கலைஞர்கள், தோல்பாவைக் கூத்துக் கலைஞர்களுக்கு மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் **திரு. தங்கம் தென்னரசு** உதவித் தொகையினை வழங்குகிறார்.





கலகக்காரர் பெரியார்...

# வேகமெடுக்கும் இயல்–இசை–நாடக மன்றம்!

**சி**வப்பு சட்டையுடன் மேடையேறுகிறார் பெரியார். ஜாதி-மத-கடவுள் எதிர்ப்புக் கருத்துக்களை பேசுகிறார். அவரை நோக்கி செருப்புகள் வீசப்படுகின்றன. கலங்கவில்லை பெரியார். தனக்கு உதவியாக இருக்கும் தொண்டரை அழைக்கிறார். 'இந்த செருப்பு உன் காலுக்கு சரியா இருக்குமா பாரு' என்று ஒரு செருப்பைக் காட்டுகிறார். "சரியா இருக்குங்கய்யா" என்கிறார் தொண்டர். 'அப்படின்னா அதோட ஜோடி அதோ இருக்கு பாரு. அதையும் சேர்த்து காலிலே மாட்டிக்க. மத்த செருப்புகளையெல்லாம் மூட்டை கட்டிக்க... நல்லா விலை போகும்" என்கிறார் பெரியார். மதுரை நிஜ நாடகக் இயக்கத்தினரின் 'கலகக்காரர் தோழர் பெரியார்'' என்கிற இந்த நாடகம் அண்மையில் அரங்கேறியது, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சென்னையில் நடத்திய முத்தமிழ் விழாவில்.

வருடத்திற்கொரு முறை, மேலிடப் பரிந்துரைப்படி 'கலைமாமணி விருது' பெறுவோர் பட்டியலை தயாரித்து வெளியிடுவது மட்டும்தான் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வேலையோ என்பது படைப்பாளிகள் பலரது சந்தேகம். "இல்லை.. இல்லை... கலைவளர்ச்சிக்கான சிறந்த உரம்தான் இந்த அமைப்பு. இத்தனை நாளாக சரியாகப் பயன்படுத்தப்படாமல் கிடந்த உரத்தை நாங்கள் பயன்படுத்தி கலைப்பயிர்களை வளர்க்கிறோம்'' என்பது போல புதிய வேகத்தில் செயல்படுகிறார்கள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் புதிய தலைவரான திரைப்பட இயக்குநர் ராமநாராயணனும், உறுப்பினர்-செயலரான கவிஞர் இளையபாரதியும்.

தமிழ்க் கலையில் என்னென்ன வடிவங்கள் உண்டோ அத்தனையையும் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு இருக்கிறது. மரபு சார்ந்த கலைகளுடன் நவீன கலை வடிவங்களையும் அரங்கேற்றுவதில் வேகம் காட்டுகிறது புதிய நிர்வாகம். இயல்-இசை-நாடகம் மூன்றிலும் சிறப்பு வாய்ந்த சிலப்பதிகார ...ப்பு இன்றைய தலைமுறையினருக்கு

அறிமுகப்படுத்தும் வகையி...
நாட்டிய நாடகத்தை ...
வாரங்களுக்கு முன் இம்மன்...
நடத்தியிருந்தது. அதனைத்
தொடர்ந்து 3 நாள் முத்தமிழ்
விழாக் கொண்டாட்டம்.

மயிலாப்பூர் பாரதிய வித்யா
பவன் அரங்கில் ஜூலை 26 அன்று
சங்கத் தமிழ் நாட்டிய நாடகம்.
அடுத்த நாள் அருணா சாய்
ராமின் தமிழ் இசை அமுதம்,
மூன்றாம் நாள்தான் நாம் மேலே
குறிப்பிட்ட பெரியார் நாடகம். நிஜ
நாடக இயக்கத்தின் இயக்குநர்
மு.ராமசாமி, பெரியார் ஈ.வே.
ராமசாமியை அரங்கில் இருந்த
எல்லோர் மனத்திலும் குடியேற்றினார் என்று சொல்லும் அளவுக்கு
சிறப்பாக இருந்தது நாடகம்.
... விழாக்களை
... கொள்றோம் ...
...ந்தோடு மட்டும் இந்த இயல் இசை
நாடக மன்றத்தின் பணி முடிந்துவிடாது
தமிழின் அரிய கலைகள் தொடர்பான
நூல்களை வெளியிடுவது. புதிய கலை
ஞர்களை மேம்படுத்துவது. பயிற்சி
வடிவங்களை ...
கலை அளிப்பது என நிறைய பணிகள்
இருக்கின்றன. இதையெல்லாம் நிறை
வேற்றி முடிக்கவேண்டும் என்கிற வேக
த்துடன் செயல்படுகிறோம். முதல்வர்
கலைஞர் இருப்பதால், கலை வளர்ச்சி...
கான அரசாங்க உதவிகள் அனைத்...
கிடைக்கும். எல்லாவற்றுக்கும் மேல ...
ஹெரிடேஜ் வில்லேஜ் அமைப்பதும் ...



இராமநாராயணன்

...முகத்தின் ...
சார்ந்த கிராம...
ஒன்றை செ...
னைக்கு அரு...
உருவாக்கி, ...
நாட்டு வெ...
நாட்டு சுற்று...
பயணிகள்
முகக் கலை...
தினந்தே...
காணும்படி ...

வேண்டும் என்பது எங்கள் கனவு ...டம்" என்கிறார்கள் மன்றத்தின் நிர்வாகிகள்.

'மெல்லத் தமிழ் இனி சாகும்' என்ற மகாகவியின் வேதனையைக் களைவதற்கான வேலைகள் வேகமடைந்து நடைபெறுவதை உணர முடிகிறது.

**-லெனின்**



இளையபாரதி

# சென்னை சங்கமத்தில் ‘தமிழ்ச் சங்கமம்’



# நாட்டுப்புறக் கலை விழா




















# நாட்டுப்புறக் கலை விழா














# கவிஞர் கனிமொழி கோவை புத்தகத் திருவிழாவில் ஆற்றிய உரை...



இந்த கலைஞர் படைப்பரங்கத்திற்கு என்னை அழைத்து திறந்துவைக்கவும் பணித்து என்னை பெருமைப்படுத்திய கவிஞர் திரு. இளையபாரதி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் அவர்கள் எந்தவிதமான மாறுபாடுகளும் இல்லாத ஒரு நாத்திகவாதி. ஆனால் அவரது தொண்டர் ஒருவர் ஏறத்தாழ பக்தராகிவிட்டார். அது ஒரு நல்ல விஷயமா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அவர் பக்தராகவே மாறிவிட்டவர் இளையபாரதி. என்னையோ, அண்ணனையோ ஏதாவது நிகழ்ச்சிக்கு அழைக்கிறதென்றால் அவர் பயன்படுத்தும் ஒரு வார்த்தை இது, ''நீங்க தலைவரோட அம்சம்தானே, எனவே உங்களை அழைக்கிறேன்'' அப்படி என்று சொல்வார். இந்த அம்சம் என்பதற்குப் பின்னாடி எத்தனை அர்த்தங்கள் இருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் புரிந்த ஒரு விஷயம்தான். அவர் வந்து எத்தனையோ ஆண்டுகளாக தொடர்ந்து அப்பாவுடைய எழுத்துக்களை நேசித்து வருபவர். அவரது புத்தகத்தில் ஒரு கவிதை புத்தகம் கூட 'என் முதல் காதலிக்கு' என்கிற புத்தகம்தான். அப்பாவைப் பற்றி இளையபாரதி எழுதியுள்ள புத்தகம். தொடர்ந்து ஒரு மனிதன் இவ்வளவு ஆழமாக நேசிக்கும் காதலுடன் செய்யப்பட்டது தான் இந்த படைப்பரங்கம். புகைப்படம் என்பது ஒரு அழகான பதிவு. இந்தப் புகைப்படங்கள் வருதற்கு முன்னால் எத்தனையோ தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். எத்தனையோ அரசர்கள் இருந்திருக்கிறார்கள். எத்தனையோ ஸ்தாபித்தவர்கள் இருந்திருக் கிறார்கள். அவர்களைப் பற்றி, அவர்கள் எப்படி இருந்திருப்பார்கள் என்பது கூட நமக்கு சரியாகத் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பங்கள் இல்லாமல் போய்விட்டது.

புகைப்படங்கள் இவ்வளவு அழகாக, நேர்த்தியாக புத்தகக் கண்காட்சியில் வைத்து இருப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு விஷயம். ஏனென்றால் திராவிட இயக்கம் என்பது புத்தகங்களின் வாயிலாகவும், எழுத்துக்களின் வாயிலாகவும் வளர்ந்த இயக்கம். அந்த இயக்கத்தின் தலைவரின் வரலாற்றை மறுபடியும் அந்த இடத்திற்கே அதை அழைத்து வந்து அங்கேயே அவரின் சாதனைகளை விளம்பரப்படுத்தி அதற்கு அங்கேயே ஒரு இடத்தைப் பெற்று இந்த கலைஞர் படைப்பரங்கை அமைத்து இருப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு விஷயம். இன்னொரு முக்கியமான விஷயம் திராவிட இயக்கம் என்பது புத்தகங்களுக்கு நடுவில் வளர்ந்த ஒரு இயக்கம்தான். அறிவுக்கிடையே நடந்திருக்கின்ற ஒரு இயக்கம்தான். எத்தனையோ போராட்டங்களைத் தாண்டி வளர்ந்த ஒரு இயக்கம் என்பது உங்களுக்கு எல்லாம் நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இங்கே பேசியவர்கள் கூட ஒரு சமூக மாற்றத்தை திராவிட இயக்கம் எத்தனை கஷ்டப்பட்டு போராடி சாதித்திருக்கிறது என்பதைப் பற்றி பேசினார்கள். நான் படித்த ஒரு விஷயத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தலைவர் அவர்கள் 1969இல் முதலமைச்சரான பிறகு சட்டநாதன் கமிஷன் என்ற ஒன்றை ஏற்படுத்தினார். இதை ஏற்படுத்திய முதல் தலைவர் அவர். சட்டநாதன் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு வகுப்பிலிருந்து வந்தவர். அவர், ஒரு வேளை சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாமல் வாழ்ந்து வந்த சூழலில், எல்லா விதங்களிலும் ஒடுக்கப்பட்டவர். சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும். அவர் பல பட்டங்களை வாங்கிக் கொண்டு, கல்லூரி ஒன்றில் வேலைக்குச் சேர்கிறார். அப்போது அந்த கல்லூரியில் வேலைக்கு சேரும்போதே பலருக்கும் ஓர் ஆச்சர்யம். அதாவது மேட்டுக்குடியில் ஒரு ஆதிக்க ஜாதியில் பிறக்காத ஒருவர் இவ்வளவு நல்ல மதிப்பெண்கள் வாங்கி இவ்வளவு புத்திசாலியாக இருப்பது, இத்தனை விஷயங்கள் தெரிந்துகொண்டவராக இருப்பதை நம்பமுடியவில்லை. அதைத்தாண்டி அவர் ஐ.ஏ.எஸ். வேலைக்கு வந்து ஒரு பரிட்சை எழுதிவிட்டுத் திரும்புகிறார். அங்கு அவருக்கு தேர்வுக்கான நாளைக் குறித்து ஒரு கடிதம் வரவேண்டும். அந்தக் கடிதத்திற்காக அவர் காத்திருந்து... காத்திருந்து விடுமுறையும் வந்துவிடுகிறது.

விடுமுறை காலத்தில் தினமும் கல்லூரிக்கு வந்து தனக்கு கடிதம் வந்திருக்கிறதா? என்று கேட்டுவிட்டுப் போகிறார். அவரை கடிதம் வரவில்லை... வரவில்லை... என்று கூறி அங்குள்ளவர்கள் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். பிறகு ஒரு நாள் அதாவது அந்தத் தேர்வுக்குச் செல்ல வேண்டிய காலம் முடிந்த பிறகு அந்தக் கல்லூரியின் முதல்வர், சட்டநாதனை அழைத்து ஒரு கடிதத்தை நீட்டுகிறார். அப்போது சட்டநாதன் கேட்கிறார், ''நான் தினமும் கல்லூரிக்கு வந்து, எனக்குக் கடிதம் வந்ததா? கடிதம் வந்ததா? – என்று கேட்டேன், அப்போதே ஏன் எனக்கு வந்த இந்தக் கடிதத்தைக் கொடுக்கவில்லை? இது எவ்வளவு முக்கியமான கடிதம். ஏன் என்னிடம் கொடுக்கவில்லை?'' என்று கேட்க அதற்கு அந்த கல்லூரி முதல்வர், ''இல்லை இல்லை, முக்கியமான கடிதம் என்பதால்தான் என் அறையில் வைத்துப் பூட்டிவிட்டுச் சென்றுவிட்டேன்.உங்களைச் சந்தித்தபோது எனக்கு மறந்துவிட்டது'' என்கிறார். அந்தக் கடிதத்தின் உறையிலேயே அது என்ன கடிதம் என்பதும் அதன் முக்கியத்துவம் என்ன என்பதும் மிகத்தெளிவாகவே இருக்கிறது. இருந்தும் அவருக்கு அந்தக் கடிதம் கொடுக்கப்படாமல் மறைக்கப்பட்டதென்றால் – அப்போது சட்டநாதன் சொல்கிறார் 'இதன் பின்னால் இருந்த அரசியல் மற்றும் வகுப்புவாத துவேஷம் மிகத் தெளிவாகத் தெரிந்தது' என்று.



இன்னொரு விஷயம் சாகித்ய அகாடெமியில் இப்போது செயலாளராக இருக்கும் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் டெல்லியில் இருக்கிறார்கள். மிக முக்கியமான அற்புதமான எழுத்தாளர். அவர் ஒரு சம்பவத்தைச் சொன்னார். அவர் கர்நாடகத்தில் பெங்களூரில் படித்துக்கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில் அவரின் நண்பராக இருந்தவர் லங்கேஷ். தீப்பொறி பறக்கும் எழுத்துக்களையும் கருத்துக்களையும் எழுதும் கன்னட எழுத்தாளர். இவர்கள் எல்லாம் தந்தை பெரியாரை பெங்களூருக்கு அழைத்து ஒரு கூட்டம் நடத்த வேண்டும் என்று திட்டமிட்டு பெரியாரை அன்போடு அழைக்கிறார்கள். பெரியாரும் கூட்டத்திற்கு வருகிறார். அப்போது அந்தக் கூட்டத்தில் அங்கிருக்கும் இந்துத்துவவாதிகள் அந்த நேரத்தில் மேடைக்கு முன்னாலேயே நின்றுகொண்டு பெரியாருக்கு எதிராக கோஷங்களை எழுப்பிவிட்டு, கற்களாலும், அழுகிய முட்டைகளாலும், தக்காளிகளாலும் பெரியாரைத் தாக்குகின்றனர்.





''சமூக நீதிக்காக, ஒடுக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் ஒரு தலைவனுக்குத் தரப்படவேண்டிய சிறந்த வரவேற்பு இதுதான். இதைவிட பெரிய ஒரு வரவேற்பை யாராலும், எங்களாலும் கூட, இந்தக் கூட்டத்தைக் கூட்டினவர்களாலும் கூட பெரியாருக்குக் கொடுத்து இருக்கமுடியாது. ஒரு வீரனுக்குத் தரவேண்டிய சரியான வரவேற்பு இதுதான்'' என்று சொல்கிறார் லங்கேஷ். அப்படிப்பட்ட போராட்டங்களைத் தள்ளாத வயதில் கூட சந்திக்க வேண்டியிருந்த பெரியாரின் வழியில் வந்தவர்தான் கலைஞர் அவர்கள். அவர் தாண்டி வந்த போராட்டங்கள், கடந்து வந்த இன்றைக்கும் சந்திக்க வேண்டிய போராட்டங்களை நாம் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம். இதை எல்லாம் மிக அழகாக, இந்த காலகட்டத்திற்கு ஏற்றவாறு இந்தப் பதிவுகளை எல்லாம் சேர்த்து இங்கு இளையபாரதி தந்திருக்கிறார். இதோடு நின்றுவிடக் கூடாது. இதைப் புத்தக வடிவிலும் அவர் தரவேண்டும். பல தலைவர்களுக்கு அவர்களுடைய புகைப்படங்கள் ஒரு புத்தகமாக வந்திருக்கிறது. இந்திராகாந்தியின் புகைப்படங்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார் ரகுராய். பல உலகத் தலைவர்களுக்கும்இந்த கௌரவம் செய்யப் பட்டிருக்கிறது. இங்கு இருக்கும் புகைப்படங்களை எல்லாம் திரட்டி ஒரு அற்புதமான புத்தகமாக இதை அவர் நிச்சயமாகக் கொண்டுவர வேண்டும். அடுத்த புத்தகக் கண்காட்சியில் அதை இளையபாரதி வெளியிடவும் வேண்டும் என்று ஒரு விண்ணப்பத்தை அவரிடம் வைக்கிறேன்.





இங்கு கலைஞர் அவர்களைப் பற்றி பலர் பேசினார்கள். அவர்கள் கொண்டுவந்திருக்கும் சமூக மாற்றங்களைப் பற்றிப் பேசினார்கள். ஆனால் இதை எல்லாம் தாண்டி மிகச் சாதாரணமான எல்லோரிடமும் பேசக்கூடிய ஒரு மனிதனைப் பற்றிப் பேசினார்கள். இதை எல்லாம் தாண்டி சாமானிய மக்களின் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையைத் தொடும்போதுதான் ஒரு தலைவனின் மேன்மையை நாம் பார்க்க முடிகிறது. பலர் வந்து அப்படி அப்பாவைப் பற்றிப் பேசி நான் பார்த்திருக்கிறேன். பல பெருமைகளைச் சொல்லிக் கேட்டிருக்கிறேன். ஆனால் ஒரு செய்திப் படத்திற்காக சென்னைக்கு அருகில் உள்ள பரனூருக்குச் சென்றிருந்தேன். பரனூர் என்பது அப்பாவுடைய ஆட்சியிலேயே தொழுநோயாளிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு இடம் அது. அங்கு போனபோது தான் அங்கு இருந்த மக்களைப் பார்க்கும்போது தான் தெரிந்தது. அங்குள்ளவர்கள் சொன்னார்கள் எங்களை யாருமே பார்க்கக் கூடாது என்று தங்கள் கண்களை மூடிக்கொண்டு செல்கையில் எங்களை ஒட்டுமொத்த சமூகமே ஒதுக்கிவைத்துள்ள சூழலில் எங்களின் வேதனைகளை, கஷ்டங்களை உணர்ந்து புறக்கணிக்கப்பட்ட எங்களையும் பொருட்படுத்தி ஒரு தலைவர் சிந்திக்கிறார், சிந்தித்து செயல்படுகிறார் என்றால் அவர் கலைஞராகத்தான் இருக்க முடியும் என்று உணர்ச்சிவசப்பட்டு அங்குள்ளவர்கள் பாராட்டினார்கள்.எனக்குத் தெரிந்து அவரது வாழ்க்கையில் கிடைத்திருக்கக் கூடிய அத்தனைப் பாராட்டுகளையும் தாண்டி அவருக்குப் படிக்கப்பட்ட மிகச் சிறந்த பாராட்டு இதுவாகத்தான் இருக்க முடியும் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.


# இன்குலாப் நாடக விழா













நாடு இயல். இசை. நாடக மன்றம் நடத்திய 'குறிஞ்சிப்பாட்டு' நாடகம் (செய்தி 3 ஆம் பக்கம் காண்க)







# கலைஞர் படைப்பரங்கம்
# ‘எண்ணக் களஞ்சியம் வண்ணக் கருவூலம்’



**கலாப்ரியா**

இந்த நான்மாடக் கூடலினை நனைத்துச் செல்கின்ற வைகை நதிக்கு ஒரு சிறப்பு உண்டு. மற்ற நதிகளைப் போல் அது கடலில் சென்று கலப்பதில்லை. ‘மைக்கடலில் வைகல் - ஒழி வைகை வளநாடு’ என்று கடவுள் மாமுனிவர் கூறுவார். அப்படிப்பட்ட வைகை நதியோரம் இன்று ஒரு புத்தகக் கடலை ஏற்படுத்தித் தந்திருக்கின்றார்கள். இதற்கு தன் ஈடுபாடு மிக்க செயலாற்றலால் பின்னணியாக இருக்கிற அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும் மாவட்ட ஆட்சியாளர் நண்பர்களுக்கும் எவ்வளவு பாராட்டை பொழிந்தாலும் தகும்.

இந்தியாவிலேயே கல்வெட்டுகளில் அதிகம் காணப்படும் மொழி நம்முடைய தமிழ்மொழி. அச்சு இயந்திரம் இந்தியாவில் அறிமுகமானபோது முதன்முதலில் அச்சேறிய இந்திய மொழி - தமிழ்தான். இதை நான் சொல்லவில்லை, தமிழாய்ந்த தமிழமைச்சர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆய்ந்து சொல்லிய செய்தி இது.

சங்கத் தமிழிலும், சிலம்பிலும், செப்பேடுகளிலும் கல்வெட்டுகளிலும் தன் பெருமையை பறைசாற்றிக் கொண்டிருக்கும் மதுரையில் இன்று இரண்டாவது புத்தகக் கண்காட்சி சீரோடும், சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தச் சிறப்புக்கு சிறப்பு செய்வது போல் இங்கே இன்று கலைஞர் படைப்பரங்கம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது, அஞ்சாநெஞ்சன் திரு.அழகிரி அவர்களின் கரங்களால்.

’தன்நெஞ்சறிவது பொய்யற்க’ எனும் வள்ளுவர் வாக்கினைத் தன் வாழ்வியலாகக் கொண்டு சத்திய வேள்வி நடத்தி என் வாழ்வே என் செய்தி என்று கூறிய தேசத்தந்தை மகாத்மா காந்தியின் பெயரால் இன்று இந்தியாவின் ஒவ்வொரு ஊரிலும், நகரிலும், தலைநகரிலும் ஒரு வீதியாவது, ஒரு சாலையாவது குறைந்தபட்சம் ஒரு தெருவாவது விளங்கி வருவதன் அடிப்படை என்ன என்று யோசித்தோமானால், அம் மகானைப் பற்றி அவன் தத்துவங்கள், சாதனைகள், சத்திய சோதனைகள் பற்றி வருங்காலத் தலைமுறை அறிந்துகொள்ள வேண்டுமென்பதுதானே. அதை அவர்கள் பின்பற்ற வேண்டும் என்ற சீரிய சிந்தனைதானே நோக்கமாயிருக்க வேண்டும்.

இளைய தலைமுறையும் இனிவரும் தலைமுறையும் நல்ல பாதையில் சென்று நல்ல தம்பிகளாக வளர்வதற்குத்தானே மாமனிதர்களைக் கணந்தோறும் நினைவுறுத்திக் கொண்டிருக் கிறோம். ‘வாழ்க நீ எம்மான்’ என்று வாழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

உன்னத ஆட்சி தொடங்கி உலகத்தமிழ் மாநாடு கண்டு தமிழுக்கு உழைத்த உத்தமர் பதின்மருக்கு சிலை எடுத்து மகிழ்ந்ததாலன்றோ தமிழகமெங்கும் அண்ணாவுத் தாமே முன்வந்து தமிழ்ச் சமுதாயம் சிலை எடுத்து மகிழ்கிறது.

இந்த எண்பத்தி நான்கு வயதிலும் ஒரு இளைஞனைப் போல், ஏன் இளைஞனைவிட அதிகமாக உழைத்து இன்று இந்திய அரசியல் சமன்பாட்டையே நிர்ணயம் செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ள,

**தன்னை வெல்வான்**

**தரணி வெல்வான்**

**தம்பி கருணாநிதி**

என்று தென்னாட்டுக் காந்தி கூறிய தீர்க்க தரிசனத்தை மெய்ப்பித்துக்காட்டி ஐந்து முறை முதல்வராகி ஐம்பதாண்டு கால சட்டமன்றப் பணியினையும், எழுபதாண்டு காலப் பொதுவாழ்வுப் பணியினையும் இலக்கியப் பணியினையும் புரிந்துவரும் கலைஞரின் வாழ்க்கைப் பயணத்தின் அரிய படிக்கட்டுகளை அடுக்கடுக்கான சுவடுகளை, சுவடிகளை அடக்கிக் கொண்டிருக்கும் அரிய கலைக்கூடம் இது. நெஞ்சுக்கு நீதி சொன்னவரின், சொல்லி வாழ்பவரின் பிஞ்சுப் பிராயத்திலிருந்து பேராளன் பருவம் வரை ஒரு போராளியின் வாழ்க்கைச் சித்திரங்கள் வரிசை வரிசையாக உள்ள ஒரு ஆவணக் காப்பகம் இது.

தனிமரம் தோப்பாகாது என்று சொல்வார்கள். ஆனால் இங்கே ஒரு தனிமனிதனே வனமாகி தன் எழுத்துக்களால் சமூகத்துக்குப் பசுமை சேர்த்துக் கொண்டிருக்கிறான். எழுபது ஆண்டு காலமாக ஓயாது உழைக்கும் உதய சூரியன் போல் தமிழ் இலக்கியத்திற்கு பச்சையம் வழங்கிக் கொண்டிருக்கிறான்.

இது எப்படி சாத்தியமாயிற்று? அவர் கணந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டிருப்பதால்தான் இது சாத்தியமாகி இருக்கிறது. நமது சிந்தனையின் அளவுகோல் காலந்தோறும் காலத்திற்கேற்ப மாறிவருகிறது வரும் என்ற உண்மையை ஒப்புக் கொண்டதனால்தான் அவரால் தொல்காப்பியத்துக்கும் உரை எழுத முடிகிறது, புதுக்கவிதைக்கும் முன்னுரை எழுத முடிகிறது.



மதுரை புத்தகதிருவிழாவில் கலைஞர் படைப்பரங்கத்தை முக அழகிரி திறந்துவைத்தார் அருகில் கனிமொழி எம்பி, காந்தி அழகிரி, அமைச்சர் தங்கம் தென்னரசு.

இந்தப் படைப்பரங்கின் பழைய புகைப்படங்களும் நூல்களும் என்னை என் சிறு வயது நினைவுகளுக்கு இட்டுச் செல்கிறது. நாற்பதாண்டுகளுக்கு முன்னால் நடந்த உலகத்தமிழ் மாநாடு எங்களைப் போன்ற பதினாறு பதினேழு வயது இளைஞர்களுக்கு அன்று மிகப்பெரிய உத்வேகமும் தமிழ்மேல் தளராக் காதலும் உண்டாக்கிற்று. அம்மாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட ஒரு ஆவணப் படத்திற்கு கலைஞர் தன் கவி வரிகளால் தந்த வர்ணனைகள்தான் என்னை என் முதல் கவி வரிகளை எழுதத் தூண்டிற்று.

அந்த உரைநடைக் கவிதையும், அண்ணாவின் மறைவிற்கு கலைஞர் வானொலியில் வாசித்த இரங்கற் பாவும் எங்களைப் போன்றோரின் புதுக்கவிதைக்கு முன்னோடி என்றால் பொய்யில்லை.

இந்த ஏகலைவன் பேனா எடுப்பதற்கு அந்த துரோணரே காரணம். ஆனால் இவர் புராண காலத்து துரோணரில்லை. கட்டை விரல் காணிக்கை கேட்கிற சனாதன சதிகள் எல்லாம் அவருக்குத் தெரியாது. திறமை எங்கிருந்தாலும் வளர்க்கக் கூடியவர், வாழ்த்தக் கூடியவர். வாழ்த்தைச் சுருக்கிக் கொள்ள அவர் வசிஷ்டரில்லை.

நிலையில்லாத மனதுக்கும்

நிலைபெற்ற புகழுக்கும்

சொந்தக் காரன் - என்னைச்

சொக்க வைத்த இலக்கிய

பந்தக்காரன்

என் ஆருயிர் நண்பன் என்று திசைமாறிய பறவையை வாழ்த்துவதற்கு, புகழ்வதற்கு ஒரு பரந்த மனமும் தாயுள்ளமும் வேண்டும். அது கலைஞரிடம் எப்பொழுதும் உண்டு.

மற்றவருடைய எழுத்துச் சுதந்திரத்தை மதிக்கிறவர் கலைஞர். அதன் அழிக்க முடியாத உதாரணமாகத் திகழ்கிறவர் கவிஞர் கனிமொழி.

இன்னும் எவ்வளவோ சொல்லிக்கொண்டே போகலாம். அவருடைய படைப்புகள் ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு வரியைச் சொன்னாலே ஒரு நாள் காணாது.

தமிழ் எழுத்து வழக்கில் ஆதியில் காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி போன்றவை கிடையாது. இந்த நிறுத்தற் குறி சமாச்சாரங்கள் ஆங்கிலம் தந்த வழக்கு. கலைஞரின் படைப்புப் பணிக்கும் சமூகப் பணிக்கும் என்றுமே முற்றுப்புள்ளி கிடையாது. அது ஒரு தொடர்கதை. தொடர் காவியம்.

இந்தக் காவியத் தலைவனை, இன்று இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டியாக விளங்குகின்ற கலைஞரை தங்கள் வழிகாட்டியாக இளைய தலைமுறை ஏற்றுக்கொள்ள, எடுத்துக்கொள்ள இந்தப் படைப்பரங்கம் பெரிதும் உதவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

காலமெனும் குழந்தை ஒவ்வொன்றாய்ச் சேகரித்த பீர்க்கம்பூக்களை, பூசணி மொட்டுகளை மார்கழி வாசலில் அழகாய்க் கோலமிட்டு மறுபடி பூக்க வைத்துப் பார்ப்பது போல் ஒரு பூக்கோலமாகத் தன்னுடைய கவிதைகளைப் போலவே, மிக மிக அழகாக அடுக்கி அழகுக்கு அழகு சேர்க்க அரும்பாடு பட்டுள்ள திராவிட இயக்கக் கவிஞனும் கலைஞரின் அணுக்கமான தொண்டனுமாகிய கவிஞர் இளையபாரதியை, எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவருக்கு என் வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இயல், இசை, குறிஞ்சிப்பாட்டு - நாடகம்

**தமிழ்நாடு இயல், இசை, நாடகமன்றம் கலைஞர் ஆட்சி தொடங்கியதிலிருந்து, புது முறுக்கோடு ஏறு நடை போடுகிறது.**

**இதன் தலைவராக, பிரபல இயக்குநரும், படத்தயாரிப்பாளர் சங்கத் தலைவரும், திராவிடர் இயக்கப் பிரமுகர்களில் ஒருவருமான மானமிகு இராம. நாராயணன் அவர்களையும், செயலாளராக மானமிகு கவிஞர் இளையபாரதி அவர்களையும் நியமித்து, தக்காரை செயற்குழுவில் இடம்பெறச் செய்தது முதல்வர் கலைஞரின் செயற்கரிய சாதனைதான்.**

**தமிழ் இன உணர்வும், மொழி உணர்வும் பண்பாட்டுப் பாதுகாப்பும் அதன் செயலாக்கங்கள் முக்கியமாக இடம்பெறத் தவறுவதில்லை.**

**தமிழ்நாட்டின் தலைசிறந்த புரட்சி எழுத்தாளரும், இலக்கிய ஆய்வாளர் பேராசிரியர் மானமிகு தோழர் இன்குலாப் அவர்களது மூன்று நாடகங்களை மூன்று நாள் சென்னை - தியாகராயர் நகர், தியாகராயர் கலை அரங்கில் நடத்தி புதுமை சேர்த்தனர்.**

மூன்றாவது நாள், 'குறிஞ்சிப் பாட்டு' என்ற நாடகம். பேராசிரியை தமிழச்சி அவர்களது மேற்பார்வையில் தயாரிக்கப்பட்ட, இந்த சங்க இலக்கியப் பாடலை அடிப்படையாகக் கொண்ட நாடகம். பல்வேறு தற்கால சூழ்நிலைகளையும் சுட்ட அறிவுறுத்தி சம்மட்டி அடி கொடுத்திருப்பதாக உள்ளது கண்டு வியந்தோம்.

நடித்தவர்கள் பெரிதும் கல்லூரிப் பேராசிரியைகள், மாணவிகள், ஆய்வுத்துறையாளரும். ஒப்பனை அதே மேடையில், கண் இமைக்கும் நேரத்தில் ஒவ்வொருவரும் பேசுவது சமுதாயத்திற்கான சாடல்கள் சார்ந்த பற்பல நேரங்களில் .

பலவகை உணர்வுகள்,ஒன்பான் சுவைக்கான காட்சிகள், வீரம், விவேகம், வேதனை, கொடுமையை எதிர்த்தக் குமுறலின் குரல் எல்லாம் ஒன்றரை மணி நேரத்தில் நாடகத்தில்.

சங்க காலத்தை சங்கையிலாத மக்கள், சுற்றுச்சூழல் அழிப்புப் பற்றியோ, போர் வெறியர்களின் பொல்லாங்கு பற்றியோ, ஆதிக்கவாதிகளின் பண்பாட்டு படையெடுப்பின் மூலம் ஏற்பட்ட, ஏற்பட்டுவரும் அழிவுகள் பற்றியோ கவலைப்படாதவர்களுக்கு 'சுரீர்' எனத் தைக்கும் வண்ணம் காட்சிகள்.

புரட்சி எழுத்தாளர் இன்குலாப் முதல், நடிப்புக் கலைஞர்கள், ஆக்க முயற்சியாளர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

குறிஞ்சிப் பாட்டு நாடகம் (தொடர்பாக)

காலந்தோறும் பறம்பு மலை பெற்ற மாற்றத்தை சுருக்கமாக அடுக்கித் தருகிறார்.

விறலி 1: பறம்பு மலையின் கொண்டாட்டம் போய்விட்டது.

விறலி 2: கொட்டும் அருவியும் நின்று விட்டது.

கோபி 1: கபிலருக்கு அது திணி நெடுங்குன்றம்

கோபி 2: திருஞான சம்பந்தருக்கு அது கொடுங்குன்றம்.

கோபி 3: பிறகு அது திருநெலக்குன்றம்.

கோபி1: அதுக்குப் பின்னால் அது திருக்கொடுங்குன்றம்.

விறலி 1: அருணகிரிநாதருக்கு அது கொடுந்தின் குன்றம்.

கோபி: பறம்புமலை பிறகு புறமலை

விறலி : இப்போ பிரான்மலை

பறம்புமலை பிரான்மலையாகிய வரலாறு நாடகத்தில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அது மீண்டும் பறம்பு மலை ஆகவேண்டும். பறம்பு மலையாக மாற இந்த நாடகம் உதவும்.

பறம்புமலை, போரில் அழிந்துபோனதை சொல்லும்போது, 'அப்போ குதிரைக் குளம்படிச் சத்தம், யானையின் பிளிறல், தேர்ச்சக்கரச் சுழற்சி, ஊர் சுடும் புகை, மக்களின் ஓலம் என்று தொகு சொற் கோபியன் அறிவிக்கிறான்.

விறலி சொல்கிறாள் : இப்போ போர் விமான இரைச்சல், பீரங்கி முழக்கம், துப்பாக்கிச் சத்தம், அணுகுண்டு, ஹிரோசிமா, நாகசாகி, வியத்நாம், தமிழீழம், பொக்ரான், ஈரான், ஈராக் ஆதிக்கம் செய்யணும்கிற மனோபாவம் நீடிக்கிற மட்டும் போர் நடக்கும்.

அப்பவும் இப்பவும் இதுதான் நடந்து வருகிறது என்று சங்க காலத்தை 21-ஆம் நூற்றாண்டோடு இணைத்து விடுகிறார் நாடக ஆசிரியர்.

எல்லா வளங்களும் தனக்குத்தான் வேண்டும் என்று எல்லாக் காலத்திலும் பேரரசுகள் நினைக்குது. ஆனால், அந்த மண்ணோட மக்கள் அதை ஏத்துக்குற மாட்டாங்க' என்று தொகு சொற்கோபியன் வாயிலாக நாடக ஆசிரியர் அறிவிப்பது மண்ணின் மைந்தர்களது உரிமைக் குரலாகும். ஈழ விடுதலைப் போராட்டத்தை நினைவுபடுத்தும் நற்குறிப்புகளாகும்.

பாரி மகளிர் அங்கவையும் சங்கவையும் பேசுவதில் பெண்ணுரிமையை அமைக்கிறார்.

**அங்கவை:** அவன் மாப்பிள்ளை இல்லை. காதலன்.

**சங்கவை :** காதலன்?

**அங்கவை:** ஆமாம்... பார்த்து வைத்து மணமுடித்தால் மாப்பிள்ளை... காதலித்தால் காதலன்.

**சங்கவை:** இப்படி எதுவுமில்லாமல் மூவேந்தர்கள் நம்மைச் சிறை எடுக்க முயன்றார்கள். வேந்தர்களுக்குக் கட்டுகிற திறைப்பொருள் போல, நம்மையும் கேட்கிறார்கள். பெயர் என்னவோ மகட்கொடையாம்.

**அங்கவை :** நாம் என்ன பொன்னா - பொருளா? கொடையாகத் தருவதற்கு? என்று பெண்ணுரிமை மிளிரும் உரையாடலை அமைக்கிறார்.

வேந்தர்களின் தூதுவர்கள் பாரி மன்னனைப் பார்த்து, 'பேரரசுகளை எதிர்க்காதீர்கள்' என்று சொல்லி, பாரி மன்னன் பதில் சொல்கிறான்.

**'பாரிக்குத் தன்மானம் பெரிசு...**

**மூச்சு விடுவது பெரிசல்ல...**

என்று பாரி முழங்குவது உணர்ச்சிகரமாக இருக்கிறது.

பாரி மன்னனுக்கு கபிலர் கூறுகிறார். எல்லா விழுமியங்களையும் அழிச்சித் துடைக்கிற ஒரு காலம் வந்துக்கிட்டிருக்கிறது. ஒரு இனத்தோட மண்... அதனுடைய எல்லை... அவ்வளவையும் பேரரசுகள் விழுங்குறாங்க. அந்த மக்களுடைய மகிழ்ச்சி, காதல் எல்லாத்தையும் 'சிதைக்கிறாங்க என்று சொல்வது இன்றைய சம்பவங்களுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது.

பறம்புமலையின் அழிவைச் சொல்லும்போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தை நினைவூட்டுகிறார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ப்ராங்க்ளின் பேயர்ஸ்சுக்கு செவ்விந்தியத் தலைவர் சியாஸ்த் எழுதிய கடித வாசகம்.

'வானத்தையும், பூமியின் கதகதப்பையும் எப்படி உங்களால் வாங்கவோ விற்கவோ முடியும்? ஏகாதிபத்தியத்தின் பசி இந்த நிலத்தை விழுங்கிப் பாலைவனத்தையே விட்டு வைக்கும்.

செவ்விந்திய நிலப் பகுதியை விலைக்குக் கேட்ட ஆட்சித் தலைவருக்கு, செவ்விந்தியத் தலைவர் கொடுத்த பதிலில் தாங்கள் அந்த மண்ணில் பிரிக்க முடியாத உறுப்பாக இருப்பதை உறுதி செய்வதை நாடக ஆசிரியர் பறம்பு மலையுடன் ஒப்பிட்டு, கலையை வாழ்க்கைக்கு, வாழ்வின் மேம்பாட்டிற்குப் பயன்படுத்துகிறார்.

நாடகத்தில், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தை அருமையாகச் சித்தரித்துள்ளார். பறம்பு மலையைச் சிதைக்க படைவீரர்கள் மரத்தை வெட்ட, தீட்டிய கோடாரியுடன் செல்கின்றனர். மலைக்குறத்திகள் ஒவ்வொருவரும் மரத்தைக் கட்டித் தழுவிக் கொள்கின்றனர். மரத்தை மரமாகப் பார்க்கவில்லை. 'இது எனக்குத் தோழி' என்று ஒரு குறத்தி சொல்கிறாள். மற்றொரு பெண் 'எனக்கு அக்கா' என்று அறிவிக்கிறாள். ஒரு குறத்தி 'எனக்கு அம்மா' என்றும் மற்றொரு பெண் 'எனக்கு அண்ணன்' என்றும் சொந்தம் கொண்டாடும் காட்சி சிலிர்க்கச் செய்கிறது.

பறம்பு மலையை விட்டுப் பிரிகின்ற சோகமான காட்சி நாடக ஆசிரியர் இன்குலாப் 'சொல்லுக்குள்' வீரியத்தைப் புதைத்திருக்கிறார். கபிலர் சொல்கிறார் : 'இந்த மலையைப் பிரிவது மலையைவிடக் கூடுதலாகக் கனக்கிறதே.' சோகம் ததும்புகிறது. கபிலர் முன் நடக்கிறார். பாரி மகளிர் தலைகுனிந்து பின் தொடர்கின்றனர். வம்ப வேந்தர்களின் வன்முறை அவர்களைத் துரத்தியது. எல்லாக் காலங்களிலும் இதுதான் மண்ணின் மக்கள் புலம் பெயரும் வரலாறு என்று குறிப்பிடுகிறார்.

'அற்றைத் திங்கள்' பாடலைப் புலம் பெயர்ந்து செல்லும் இனக்குழு ஒவ்வொன்றின் புலம்பலாகச் சித்தரித்திருக்கிறாரே இன்குலாப் அவரது சிந்தனை வரலாறு உயர்ந்தது. நாடகம் உருக்கமாகவும் இருந்தது. உணர்ச்சி பெறுவதற்கு வித்தாகவும் இருக்கிறது. தமிழகத்தின் பல பகுதிகளில் நடத்தப்பட வேண்டிய, கலைநயமும் கருத்தாழமும் தமிழ்ச் சுவையும் நிறைந்த வரலாற்றுப் பொக்கிசம்.

**வாழ்க இன்குலாப். தொடரட்டும் அவர்தம் படைப்புகள்.**

## நாட்டுப்புறக் கலைவிழா :

அடித்தட்டு மக்களின் வலிகளையும் வாழ்வையும் சொல்வது நாட்டுப்புறக் கலை

- கூத்தலிங்கம்

அல்லி மலரெடுத்து
அத்தனை பேரையும் கும்பிட்டோம்
தங்க மலரெடுத்து
தங்கைமாரே கும்பிட்டோம்
அம்மாமார்கள் அமரணும்
அன்போடதான் வாழ்த்தணும்
வந்தனமுன்னா வந்தனம்
வந்த சனமெல்லாம் குந்தணும்

கே.ஏ. குணசேகரனின் கிராமிய ராகத்தால் இழைக்கப்பட்ட வரவேற்பு பாடலுடன் களைகட்டத் தொடங்கியது தி.நகர் முத்துரங்கன் தெரு. 28.7.2007 அன்று நடைபெற்ற நாட்டுப்புறக் கலை விழாவில் மற்றொரு சிறப்பு நட்சத்திரமாகத் திகழ்ந்தவர் தஞ்சாவூர் சின்னப்பொண்ணு.

ஓடுமான் ஓடிவர - என் கண்ணே
ஒன்பது மான் பின்தொடர
அந்த மானோடும் தடமெல்லாம்...

என அவர் ஆலாபித்த தாலாட்டுப் பாடலின் நெடிய ராகத்தைக் கேட்டுக் கிறங்கியது பெருந்திரளான மக்கள் கூட்டம்.

தொடர்ந்த நிகழ்தலில் -

கவிஞர் இளையபாரதி வரவேற்புரை நிகழ்த்தினார். தலைமை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் என். சுரேஷ்ராஜன் மற்றும் முன்னிலை வகித்தவர் ஜெ. அன்பழகன்.

பெருமுரசை அதிர இசைத்து விழாவைத் துவக்கி வைத்து கவிஞர் கனிமொழி (மாநிலங்களவை உறுப்பினர்) பேசினார்: ''அடித்தட்டு மக்களின் வலிகளையும், வாழ்க்கையையும், போராட்டங்களையும் அவர்கள் தொலைத்த வாழ்க்கையையும் உள்வாங்கி வெளிப்படுத்துவதாக நாட்டுப்புறக் கலைகள் விளங்குகின்றன. காலத்தின் பெட்டகமாக இருக்கும் இந்த நாட்டுப்புறக் கலைகள் பாதுகாக்கப்படாமல் இருப்பது வெட்கப்பட வேண்டிய ஒன்று.

அடுத்து -

விண்ணதிர தப்பாட்ட முழக்குகள் இசைத்து மேடையேறி முழங்கியவர்கள் திண்டுக்கல் சந்திரா குழுவினரின் 'சக்தி' கலைக்குழு வழங்கிய பெண்கள் தப்பாட்டம்.

சலங்கை அதிர சக்தி வந்திருக்கோம்
நதியைப் போல சலசலத்து சபைக்கு வந்திருக்கோம்
பூமி அதிர சக்தி வந்திருக்கோம்
பெரும் புயலைப்போல சபைக்கு வந்திருக்கோம்

நாயன இசை, உறுமியடிச் சத்தம் பின்னணியில் ஒலித்தபடியிருக்க, தலையில் ஏந்திய கரகம் ஆடாமல் அசையாமல் அதே சமயத்தில் அப்பெண்கள் மெதுவாக ஆடியபடியே ஐந்து பெரிய வளையங்களை ஒவ்வொன்றாக உடலில் கோர்த்து இணைத்தபடி கரகமாடி பிறகு ஒவ்வொரு வளையத்திலிருந்தும் விடுபட்டு நீங்கிய ஒரு முத்தாய்ப்பான நிலையில் பின் குரல் ஒலிக்கிறது.

''பெண்ணின் கால்களுக்கு விலங்கிட்டு கைகளைப் பிணைத்துக் கட்டினாலும் பெண் தனக்குள் இருக்கும் ஆற்றலை உணர்ந்தால் பிணைக்கப்பட்ட விலங்குகள் நொறுக்கப்பட்டு பெண்ணினம் தலைநிமிரும்.''

ஜெயகாந்தன் தனது வாழ்த்துரையில் பேசியதாவது: ''நாட்டுப்புறக் கலைஞர்கள் இதைத் தொழிலாகவோ, பிழைப்பாகவோ வைத்திருப்பவர்கள் அல்ல. இவர்களுக்கெல்லாம் வேறு தொழில்கள் இருக்கின்றன. கலைஞர்கள் வாழ்ந்தால்தான் கலைகள் வாழும். இங்கே ஆடியதைத் தப்பாட்டம் என்று சொன்னார்கள். இவர்கள் ஆடியதுதான் சரியான ஆட்டம். தப்பாக ஆடுபவர்கள் எல்லாம் பெரிய கலைஞர்களாகிவிட்டார்கள். முரண்பாடுதான் இந்தியாவின் அடையாளம். நதிகளாலும் மலைகளாலும் இந்தியா பிரிக்கப்பட்டிருக்கவில்லை; பிணைக்கப்பட்டிருக்கிறது.

முன்னதாக மேடையேறிய ச. தமிழ்ச்செல்வன் (மாநில பொதுச்செயலாளர் - த.மு.எ.ச.): ''நாட்டுப்புறக் கலைகளை உழைக்கும் மக்கள்தான் காலம்காலமாகப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். செவ்வியல் கலைகளை அரண்மனைகள் பாதுகாத்து வந்தன. நாட்டுப்புறக் கலைகள் ஏழை எளிய மக்கள் வணங்குகிற நாட்டார் தெய்வ வழிபாட்டு திருவிழாக்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது'' என்று பேசிய அவர் மேலும், ''மூடநம்பிக்கைகளை வளர்க்கும் கோயில் திருவிழாக்களை நடத்த முழு இரவு சுதந்திரம் அளிக்கப்படுகிறது. பகுத்தறிவு கொள்கை வளர்க்கும் விழாக்கள் பாதி இரவு வரை மட்டும் நடத்த சுதந்திரம் அளிக்கப்படுகிறது'' என்றார். சென்னை பொதுமக்களுக்கு புதுமையாக விளங்கும் வகையில் ஜான்பாவா குழுவினரின் தமிழக வீர விளையாட்டுகள் நிகழ்த்திக் காட்டப்பட்டன. கலைநிகழ்ச்சிகளுக்கு இடையிடையே இயக்குநர் இராம. நாராயணன், பேராசிரியர் வீ.அரசு, கூத்துப்பட்டறை ந.முத்துசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

கலைவிழாவின் மற்றொரு உன்னத நிகழ்ச்சி 'கானாப்பாடல்கள்'. தனது பரிவாரங்கள் சூழ மேடையேறிய புளியந்தோப்பு நாகூரானின் தொடக்க 'கானாப்பாடல்' இனிய துள்ளல் தன்மை கொண்டது.

**தொன்னயிலெ சோறுவாங்கி**
**திண்ணயிலெ தின்னுபுட்டு**
**பண்ணயிலெ வேல செஞ்ச மாப்புளே**
**என்னப்போல பாட்டுப்பாட**
**யாரிருக்கா புளியந்தோப்பிலே...**

அடுத்து, துரை பாடிய' மருதநாயகம் வீர வரலாறு' குறித்த கானாப்பாடல்.

**அஞ்சா சிங்கம் அமைந்த தங்கம்**
**முகம்மது யூசுப் கான்சாகிப்**

மேற்சொன்ன பாடலின் தொடரும் வரிகளில்

மருதநாயகத்தின் பிறப்பு மற்றும் வாழ்க்கை நிகழ்வுகள் கானா இசையுடன் விவரிக்கப்படுகிறது. பழைய பிரிக்கப்படாத ராமநாதபுரம் ஜில்லாவில் பிறந்த மருதநாயகம் 25-வது வயதில் பெற்றோரைப் பிரிந்து, ஆங்கிலேயரின் ராணுவத்தில் சேர்கிறார். தனது திறமையாலும், துணிவாலும் படிப்படியாக வளர்ந்து தளபதியாகிறார். தஞ்சை, நெல்லைப் பகுதிகளையே மருதநாயகத்தின் பொறுப்பில் ஒப்படைக்க ஆங்கிலேயர் நினைக்குமளவுக்கு மருதநாயகம் தகுதி பெற்று விளங்குகிறார். சைவ வெள்ளாளர் குடும்பத்தில் பிறந்த மருதநாயகம் இஸ்லாமியராக மதம் மாறி முகம்மது யூசுப் கான் சாகிப் ஆகிறார்.

ஐந்துவேளை தவறாது தொழுகிறார். அவருடைய புகழ் அனைத்து மத மக்களிடையேயும் பரவி செல்வாக்குப் பெறத் துவங்குகிறார் க கிப் எனும் மருதநாயகம். ஆங்கிலேயருக்கு கான்சாகிப் மீது பொறாமையும், கோபமும் ஏற்பட, பல இன்னல்களைத் தருகிறார்கள். இறுதியில் ஆங்கிலேயரின் எதிரியாக ஆகிறார் மருதநாயகம்.

நிபுணர்களாலும், அறிஞர்களாலும் குறிப்பிடப்படாமல் விடப்பட்ட இத்தகைய எத்தனையோ வரலாற்று நிகழ்வுகள் கானாப் பாடல்களில் பொதிந்து கிடக்கின்றன. அவற்றை மேடைதோறும் வளர்த்தெடுப்பதால் உண்மை வரலாறுகள் மக்களிடம் வெளிப்பட்டுப் பரவத் தொடங்கும்.

துளியும் ஆபாசமற்ற நம் மண்ணின் பழம்பெரும் கலைகளான இந்த நாட்டுப்புறக் கலைகளைக் காண தி.நகரின் முத்துரங்கன் தெருவின் நீள்வீதியெங்கும் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் பெருந்திரளாகக் குழுமியிருந்ததைப் பார்க்கையில் தூய்மையான கலைகள் மீது மக்கள் கொண்டுள்ள மரியாதையைத் தெள்ளத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிந்தது.

DECCAN Chronicle

# State to make film on 'Tamil trinity'

By B. KOLAPPAN

**Chennai, May 24:** Chief minister M. Karunanidhi has given the green signal to the Tamil Nadu Iyal Isai Nataka Mantram to go ahead with the production of a documentary on the lives of well known Tamil composers Muthuthandavar, Arunachala Kavirayar and Marimuthaa Pillai.

Known as the "Tamil Trinity", these three composers had lived long before the Carnatic Trinity of Thiyagaraja, Muthusamy Dikshitar and Shyama Sastrigal. They are also known as the Sirkazhi Trinity as they were born in this small town in Nagapattinam.

The period of Muthuthandavar is not clearly known, though historians believe that he had lived around 1500 A.D.. Marimuthaa Pillai lived between 1712 and 1787 A.D.while Arunachala Kavirayar is said to have lived in the period 1711-1778 A.D.

Culture and tourism secretary Mr V. Iraianbu said the government had accepted in principle the proposal to make a documentary on the Tamil Trinity. "We need to prepare the script for the documentaries. It will then be scrutinised by a committee of experts. After that the production will begin," he said.

Iyal Isai Nataka Mantram member secretary Mr Ilyabharathi said the chief minister was keen on the project. "Besides Tamil Trinity, we are planning to produce documentaries depicting the lives of outstanding musicians like nagaswaram wizard Thiruvavaduthurai Rajarathinam Pillai," he said. The government had already made an announcement on this in the Assembly.

The problem with singing the compositions of the Tamil Trinity is that there are no standardised tunes for them, unlike in the case of the Carnatic Trinity, who had themselves set the ragas for their *keerthanas*.

Eminent musicologist Mr B.M Sundaram, however, says that the Tamil Trinity also had specific ragas in mind but those ragas were not properly passed on to the next generation.

"Noted flute maestro late Thirupampuram Swaminatha Pillai set the tune for around 60 songs of Muthuthandavar but not everyone follows the pattern. Likewise late Ariyakudi Ramanuja Iyengar composed the music for many of the Arunachala Kavirayar compositions. But he never followed the ragas set by Sirkazhai brothers Kothandarama Iyer and Venkatrama Iyer," he said.

Some musicologists argue that the compositions of the Tamil Trinity have no original tunes, as they were only composers and did not have adequate knowledge of music. They concede that probably Muthuthandavar, who was born in a family of musicians, could have set the tunes, but the other two, who had no musical lineage, could have confined themselves to writing the *keerthanas*.



# 2006

# கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள் பற்றிய குறிப்புகள்



## பாலகுமாரன்

எழுத்தாளர்

தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப் பள்ளி தாலுக்காவைச் சார்ந்த பழமார்நேரி கிராமத்தைச் சேர்ந்தவர் பாலகுமாரன். ஜூலை மாதம் ஐந்தாம் தேதி ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஆறாம் வருடம் பிறந்த பாலகுமாரனின் தந்தையார் பெயர் திரு. வைத்தியநாதசுவாமி. தாயார் தமிழ் பண்டிதை ப.சு. சுலோச்சனா.

பள்ளி இறுதி வரை மட்டுமே படித்த பாலகுமாரன் தாயாரின் வழிகாட்டுதலால் பழந்தமிழ் கவிதைகளிலும், நவீன இலக்கியத்திலும் நாட்டம் செலுத்தினார். இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு, அதிகம் தமிழிலக்கியம் அறிய ஆர்வம் கொடுத்தது. 'கசடதபற' என்ற சிற்றிலக்கிய ஏடு இடம் கொடுத்தது. புதுக்கவிதைகளில் நாட்டம் செலுத்தி பிறகு உரைநடைக்கு மாறி அதன் உச்சத்தைத் தொட்ட பாலகுமாரனின் படைப்புகள் 239.

சிறந்த வசனகர்த்தாவாக தமிழ்நாடு அரசு இவரை கௌரவித்திருக்கிறது. இவரது இரண்டு படைப்புகள் மிகச் சிறந்தவைகளாகத் தமிழக அரசால் பாராட்டப் பட்டிருக்கின்றன. இதைத் தவிரவும் பல பரிசுகள் பெற்றிருக்கிறார் பாலகுமாரன்.

இவர் சமீபமாய் எழுதிய மாமன்னன் இராஜ இராஜ சோழன் பற்றிய வரலாற்று நவீனம் இரண்டாயிரத்து ஐநூறு பக்கங்கள் (ஆறு பாகங்கள்) கொண்டது. இதைத் தொடர்ந்து இராஜேந்திர சோழனைப் பற்றிய வரலாற்றுப் புதினம் எழுதுவதில் முழுவதுமாய் ஈடுபட்டுருக்கிறார்.

முகவரி:

பாலகுமாரன்

80/4, வாரன் சாலை,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
செல் - 98410 57246 / 98416 80743

## வண்ணதாசன் (கல்யாண்ஜி)

எழுத்தாளர்




இலக்கிய உலகில் புகழ் பெற்ற பெயர் வண்ணதாசன். சிறுகதைத் துறையில் வண்ணதாசன் என்றும், கவிதையில் கல்யாண்ஜி என்றும் அறியப்படும் இவரின் இயற்பெயர் சி.கல்யாணசுந்தரம். சாகித்ய அகாதெமி விருது பெற்றவரும், புகழ்பெற்ற மார்க்சீய விமர்சகருமான தி.க. சிவசங்கரனின் புதல்வர். கடந்த 45 ஆண்டுகளாக எழுதி வருபவர். 1974இல் இவரின் 'தனுமை' சிறுகதை இலக்கியச் சிந்தனை விருது பெற்றது. இதுவரை 9 சிறுகதைத் தொகுப்பும், ஆறு கவிதைத் தொகுப்பும், குறுநாவல் ஒன்றும், இவர் எழுதிய கடிதங்களின் தொகுப்பும் வெளியாகியுள்ளது. 'சிற்பி' விருது உட்பட இலக்கியத்திற்காகப் பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ள இவருக்கு இசைஞானி இளையராஜா ரூபாய் இரண்டு லட்சம் பரிசளித்துப் பாராட்டியுள்ளார்.

முகவரி:
**வண்ணதாசன்**
19, சிதம்பரம் நகர்,
பெருமாள்புரம்,
திருநெல்வேலி - 627 007.
செல் - 99944 31085


## கலாப்ரியா

கவிஞர்

நவீன தமிழ்க் கவிதையில் மிக முக்கியமானக் கவிஞராகக் கருதப்படும் கலாப்ரியா ‘வெள்ளம்’ என்ற தன் முதல் கவிதைத் தொகுதியை 1973ஆம் ஆண்டு வெளியிட்டார். இதுவரை ஒன்பது கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. ‘கசடதபற’ ‘கணையாழி’ ‘தீபம்’, ‘சுபமங்களா’ போன்ற இலக்கிய இதழ்களின் மூலம் மிகப் பிரபலமானவர். பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் நடத்திய கவிதை குறித்த கருத்தரங்குகளில் பங்கேற்றவர். ஆங்கிலம், மலையாளம், இந்தி, ஒரியா, கன்னடம், வங்காளம் ஆகிய மொழிகளில் இவருடைய கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டு பெரும் பாராட்டைப் பெற்றுள்ளன. ‘கலாப்ரியா கவிதைகள்’ என்ற பெயரில் இவரின் முழு கவிதைத் தொகுப்பு வெளிவந்து இரண்டு பதிப்புகள் கண்டுள்ளது. ‘சுபமங்களா’ இதழ்களில் வந்த நேர்காணல்களின் தொகுப்புக்கு ‘கலைஞர் முதல் கலாப்ரியா வரை’ என்று பெயரிடப்பட்டுள்ளதே நவீன இலக்கியத்தில் இவரின் முக்கியத்துவத்தைக் குறிப்பதாகும்.



முகவரி:
**கவிஞர் கலாப்ரியா**
4/19, சபரி இல்லம், மேற்கு தெரு,
இடைகால் - 627 804, தென்காசி,
திருநெல்வேலி மாவட்டம்.
தொலைபேசி - 04633 - 267230
செல் - 98425 78870



மரபின் மைந்தன்
ம. முத்தையா
இலக்கியப் பேச்சாளர்

'நமது நம்பிக்கை', 'ரசனை' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியரான மரபின்மைந்தன் ம. முத்தையா நாடறிந்த நல்ல பேச்சாளர். நல்ல கவிஞர். இதுவரை நான்கு கவிதை நூல்கள், பன்னிரெண்டு சுய முன்னேற்ற நூல்கள், ஆறு மொழிபெயர்ப்புகள், இரண்டு வாழ்க்கை வரலாறு, இலக்கியம், ஆன்மீகம் என்ற தளத்தில் எட்டு நூல்கள் என முப்பத்திரண்டு நூல்களின் ஆசிரியர். கவிஞர் வைரமுத்து வழங்கிய விருதுகள் உட்பட பல விருதுகள் பெற்றிருக்கும் முத்தையா ஏராளமான ஒலி நாடாக்களையும் வெளியிட்டிருக்கிறார்.

முகவரி:
**மரபின்மைந்தன் ம. முத்தையா,**
3, பத்மா லே-அவுட், திருச்சி சாலை,
கோயபுத்தூர் - 641 045.
தொலைபேசி - 0422 - 2318671
செல் - 98430 63572

சுப.வீரபாண்டியன்
இலக்கியப் பேச்சாளர்

ஆஸ்திரேலியா, மலேசியா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், நார்வே, அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து என பல்வேறு நாடுகளில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்து, மிகச் சிறந்த சொற்பொழிவாளராக அறியப்பட்டுள்ள திரு. சுப. வீரபாண்டியன் திராவிட இயக்கத்தின் ஆரம்பகாலத் தலைவர்களில் ஒருவரான இராம சுப்பையாவின் புதல்வர். இதுவரை பதினோரு நூல்கள் எழுதியிருக்கிறார். அதில் 'பகத்சிங்கும் இந்திய அரசியலும்', 'பெரியாரின் இடதுசாரித் தமிழ் தேசியம்' ஆகியவை குறிப்பிடத்தக்கவை. 'நந்தன்', 'இனி' ஆகிய பத்திரிகை ஆசிரியர் குழுவில் பங்களித்துள்ள திரு.சுப.வீரபாண்டியன் இப்போது 'கருஞ்சட்டைத் தமிழர்' என்ற பத்திரிகையை நடத்தி வருகிறார்.



முகவரி:
**சுப. வீரபாண்டியன்,**
28, எஸ்.பி.ஐ. குடியிருப்பு,
ஆழ்வார்திருநகர்,
சென்னை - 600 087
தொலைபேசி - 24861665
செல்- 94445 16408

## டாக்டர் இரா. செல்வக்கணபதி

சமய சொற்பொழிவாளர்



மயிலாடுதுறை தருமபுர ஆதின கலைக்கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றும் டாக்டர் இரா. செல்வக்கணபதி பெரியபுராண 63 நாயன்மார் வரலாற்றை ஆங்கில உரைச் சுருக்கத்துடன் 52 மணி நேர ஒலிக்குறுந்தகடுகளாக வெளியிட்டுள்ளார். 'சைவமும் தமிழும்', 'தமிழ் வளர்க்கும் தருமபுரம்' உள்ளிட்ட ஏழு நூல்களின் ஆசிரியர். 'சைவச் செங்கதிர்', 'சேக்கிழார் விருது' உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள செல்வக் கணபதி சொற்பொழிவின் நிமித்தம் உலக நாடுகளை வலம் வந்த சொல்லேருழவர்.

முகவரி:
**டாக்டர் இரா.செல்வக் கணபதி**
எச்.15/2, கரிகாலன் தெரு,
கலாசேத்ரா காலனி,
பெசன்ட் நகர், சென்னை - 600 090.
தொலைபேசி - 24916888
செல்-94440 21113

## ஆர்.பி. நாயுடு

சமய சொற்பொழிவாளர்

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட ஆர்.பி.நாயுடு, 'மகாபாரதம்', 'இராமாயணம்' 'மற்றும்' 'பகவத் கீதை' போன்றவற்றை மிகச் சாமானியர்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் சொல்வதில் வல்லவர். பிரபந்தங்களிலும், பன்னிரு திருமுறைகளிலும் ஒருங்கே ஈடுபாடு கொண்டவர். சைவ, வைணவ பேதம் இவருக்கும், இவர் தமிழுக்கும் இல்லை. 'பிரசன்னபூஷன்' என்பது இவருடைய சொல்லாற்றலுக்கு வழங்கப்பட்ட பட்டங்களில் ஒன்று.

முகவரி:
**ஆர்.பி.நாயுடு**
ஏ.கே.2, 4வது நிழற்சாலை,
சாந்தி குடியிருப்பு,
அண்ணா நகர், சென்னை - 600 040.
தொலைபேசி - 26200919
செல் - 94441 47064



## கீதா ராஜசேகர்

இசை ஆசிரியர்



திருமதி. கீதா ராஜசேகர், சங்கீத கலாநிதி திருமதி. டி.கே. பட்டம்மாள் அவர்களிடம் முறையாக இசை பயின்று, 30 ஆண்டுகளுக்கு மேலாக அகில உலகெங்கும் கச்சேரிகள் பல நிகழ்த்தி வருகிறார். பல சபாக்கள் - பரிசுகள் வழங்கி இவரைப் பாராட்டியுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை முத்தமிழ்ப் பேரவை. சங்கீத வித்வத் சபை, சென்னை ஸ்ரீ கிருஷ்ணகான சபா, சென்னை இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டி.

இவர் பெற்றுள்ள பட்டங்களுள் குறிப்பிடத்தக்கவை 'இசைச்செல்வம்', 'நாத' 'பூஷனி', பால ரத்னா.

இவருடைய ஒலிநாடாக்களும், குறுந்தகடுகளும் இசை ஆர்வலர்களுக்குப் பெரும் இசைவிருந்தாக அமைந்துள்ளது.

'இராகாலய' என்ற அறக்கட்டளையின் வழியாகப் பல மாணவர்களுக்கு இசை பயில ஊக்கத்தொகை வழங்கி வருவதும் இவரது தனிச்சிறப்பாகும்.

'மதுரகீதம்' பள்ளியின் மூலம் பல மாணவ, மாணவியர்கள் தேர்ந்த நல்லிசையைப் பயிற்சியாகப் பெற்றதன் மூலம், சிறந்த இளங்கலைஞர்களாக உருவாகி வருவதும், இவருடைய நல்லுள்ளத்-தால்தான் என்பது நினைவுகூறத்தக்கது.

முகவரி:
**கீதா ராஜசேகர்**
2, ரிவர் வியூ, கோட்டூர்புரம்,
சென்னை - 600 085.
தொலைபேசி - 24472298
செல் - 98410 53156

## சஞ்சய் சுப்ரமணியன்

குரலிசைக் கலைஞர்



சஞ்சய் சுப்ரமணியன் இந்தியாவின் பாரம்பரிய சங்கீத வித்வான்களில் முக்கிய இடம்பெற்றவர். தாம் பாட ஆரம்பித்த காலத்திலிருந்தே அவரது குரல் வளத்தினாலும், செழித்த கற்பனை வளத்தினாலும் சங்கீத சம்பிரதாயத்தின் மீதும், பாரம்பரியத்தின் மீதும் அபார நம்பிக்கையினால் வெகு வேகமாக முன்னிலை அடைந்தவர்.

1968ஆம் ஆண்டு பிறந்த இவர், தன் இசைப் பயணத்தை வயலின் மூலம் தொடங்கி, பின்பு திருமதி. ருக்மினி ராஜகோபாலனிடம் குரலிசை பயின்றார். பிறகு கல்கத்தா திரு.கே. கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் சங்கீதத்தின் நுட்பங்களைக் கற்று அறிந்தார். இன்றும் நாதசுர மேதை திரு.எஸ்.ஆர்.டி. வைத்தியநாதன் அவர்களிடமிருந்து சிறப்புப் பயிற்சி பெற்று வருகிறார்.

இந்தியாவின் அனைத்து முக்கியமான கலை ஸ்தாபனங்களிலும் கச்சேரிகள் செய்து தென்னிந்திய இசையின் பெருமையைப் பரப்பி வருகிறார். அதுமட்டுமின்றி உலக அளவிலும் இந்த இசையை எடுத்துச் சென்று அங்கு இரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறார்.


இந்தத் தலைமுறையின் இசைக்கலைஞர்களில், சஞ்சய் தன்னுடைய இசை நிகழ்ச்சிகளில் அதிகமாக தமிழிசைக்கும், தமிழ்ப் பாடல்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது குறிப்பிடத்தக்கது.

முகவரி:
**சஞ்சய் சுப்ரமணியன்**
1-ஈ, சுரேந்திரநாத் கோர்ட்,
2/3, பீமண்ண தெரு,
ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018.
தொலைபேசி - 24991999

## இஞ்சிக்குடி இ.மு. சுப்ரமணியன்

நாதசுரக் கலைஞர்

முகவரி:
**இஞ்சிக்குடி இ.எம். சுப்ரமணியன்,**
1/8, வடக்குத் தெரு,
இஞ்சிக்குடி - 609 405,
நன்னிலம் வட்டம்,
திருவாரூர் மாவட்டம்,
தொலைபேசி - 0431 - 2710691



நாதசுரக் கலைஞர் இஞ்சிக்குடி இ.மு. சுப்ரமணியன் பரம்பரை பரம்பரையாக நாதசுரம் வாசிக்கும் குடும்பத்தில் பிறந்தவர். திருவாரூர் மாவட்டம், இஞ்சிக்குடியில் பிறந்த இவரின் குடும்பத்தினர் சுமார் 20 தலைமுறைகளாக நாதசுரம் வாசித்து வருகின்றனர். முதலில் தந்தை எஸ். முத்துக்குமாரசாமி பிள்ளை, சிறிய தந்தை எஸ். அய்யாசாமி பிள்ளை ஆகியோரிடம் ஆரம்பப் பாடம் பயின்றவர். 12 வயது முதல் நாதசுரக் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்த சுப்ரமணியன் தொடர்ந்து வாய்ப்பாட்டு கற்பதற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். தன்னிகரற்ற வித்வான்களான டி.எம்.டி. என்று அழைக்கப்படும் தஞ்சாவூர் எம். தியாகராஜன், தஞ்சாவூர் சங்கரய்யர், சங்கீத கலாநிதி டி.கே.கோவிந்தராவ் ஆகியோரிடம் வாய்ப்பாட்டு பயின்று 'இசைமாமணி' பட்டமும், தங்கப் பதக்கமும் பெற்றார்.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் கச்சேரிகள் செய்துள்ள சுப்ரமணியனுக்குப் பிரபல தவில் வித்வான்கள் பலர் வாசித்துள்ளனர். மறைந்த வித்வான்கள் கூரைநாடு பக்கிரியா பிள்ளை, பழனிவேல் பிள்ளை, வலங்கைமான் சண்முகசுந்தரம் பிள்ளை, திருச்செந்தூர் நயினார்சாமி உள்ளிட்ட பல முன்னணிக் கலைஞர்களும் தவில் வாசித்துள்ளனர்.

கலைமாமணி திருவாரூர் பக்தவத்சலத்துடன் சேர்ந்து இரண்டு இசைக் குறுந்தகடுகள் வெளியிட்டுள்ளார். திருவாரூர் மாவட்ட அரசு இசைப் பள்ளியில் நாதசுர ஆசிரியராக 1997 முதல் பணியாற்றி வருகிறார். தற்போது நாதசுர இசை குறித்த முனைவர் பட்டம் பெறுவதற்காக இசை அறிஞர் தஞ்சாவூர் பி.எம். சுந்தரம், வாய்ப்பாட்டுக் கலைஞர் ஓ.எஸ். தியாகராஜன் ஆகியோரை வழிகாட்டிகளாகக் கொண்டு அண்ணாமலை பல்கலைக்கழத்தில் ஆய்வு மேற்கொண்டுள்ளார்.




## சரஸ்வதி இராஜகோபாலன்

வீணைக் கலைஞர்

காரைக்குடி சாம்பசிவ ஐயர் பாணியில் வந்த ராதாமணி சர்மா, கே.எஸ். நாராயணசாமி மற்றும் பி.எஸ்.ராகவன் ஆகியோரிடம் தன் கலையைக் கற்று மிகச் சிறிய வயதிலேயே தேசிய விருதுகளைக் குவித்தவர் சரஸ்வதி ராஜகோபாலன் பலதரப்பட்ட விமர்சகர்களாலும் பாராட்டப் பெற்றவர். சரஸ்வதி ராஜகோபாலனுக்கு பூர்வீகம் தஞ்சை. ஆனால் பிறந்தது மும்பையில். இந்தியாவில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் நம் பாரம்பரியக் கலையை பரவவிட்ட பெருமை இவருக்கு உண்டு.

முகவரி:
**சரஸ்வதி இராஜகோபாலன்**
சி-21, ஜனக்புரி எக்ஸ்டன்ஷன்,
நியூடெல்லி - 110 014.
செல் - 098108 45332



## இறையன்பன் குத்தூஸ்

இறையருட் பாடகர்

தன் பத்து வயதில் இஸ்லாமியப் பாடல்களைப் பாட ஆரம்பித்த இறையன்பன் குத்தூஸ் இதுவரை இரண்டாயிரம் கச்சேரிகள் நிகழ்த்தியிருக்கிறார். இதற்காக தமிழகம் மட்டுமல்லாது, வெளிநாடுகளுக்கும் சென்றிருக்கிறார். எழுபதுக்கும் மேற்பட்ட இசைக் கோவைகளை வெளியிட்டிருக்கும் இறையன்பன் குத்தூஸ் இப்போது திரைப்படங்களிலும் பாடி வருகிறார்.

முகவரி :
**இறையன்பன் குத்தூஸ்**
ஐ-4, இலாயிட்சு காலனி,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி - 28473236
செல் - 98403 32543



நாதசுர மேதை எம். சுந்தரம்பிள்ளையின் மகன் சுப்ரமணியம் இசைத்துறையில் கொடிகட்டிப் பறப்பதற்குக் காரணம் அவருடைய இசைப் பாரம்பரியம் மட்டுமல்ல. திருவாசி இரத்தினம் முதலியாரிடமும், எஸ். சண்முகம் அவர்களிடமும் கிட்டத்தட்ட ஒன்பது வருடங்கள் குருகுல வாசம் செய்து கலையினைக் கற்றதும் ஒரு காரணம். அதனால்தான் நாதசுர மேதை வல்லம் வி.ஏ. கிருஷ்ணன், கிளாரினெட் ஏ.கே.சி. நடராஜன், ஷேக் சின்ன மௌலானா ஆகிய மேதைகளுக்கு சுமார் 22 ஆண்டுகள் தவில் வாசிக்கும் வாய்ப்பு வாய்த்தது. இந்தியாவில் உள்ள அனைத்து சபாக்களிலும், வானொலி, தொலைக்காட்சி நிலையங்களிலும் வாசித்ததோடு ரஷ்யா, ஜெர்மனி, மலேசியா, பாரீஸ் போன்ற நாடுகளிலும் வாசித்த பெருமை இவருக்கு உண்டு, இதைவிட இவர் பெருமையாகக் கருதுவது தவில் சக்கரவர்த்திகள் வலங்கைமான் சண்முகசுந்தரம், வலையப்பட்டி ஏ.ஆர். சுப்ரமணியம், அரித்துவாரமங்கலம் ஏ.கே. பழனிவேல், திருவாளப்புத்தூர் டி.ஏ. கலியமூர்த்தி ஆகியோருடன் நீண்ட காலமாக வாசித்து வருவதைத்தான்.

## மலைக்கோட்டை எஸ்.சுப்பிரமணியன்


தவில் கலைஞர்

முகவரி :

**மலைக்கோட்டை எஸ். சுப்ரமணியன்,**

23, கீழ வீதி, சந்தி வீரப்பன் கோவில் தெரு,
மலைக்கோட்டை, தெப்பக்குளம் அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி - 620 002.
தொலைபேசி - 0431 - 2710691

பார்வையை இழந்த சூழலிலும் நம்பிக்கையை தளரவிடாது பழனி சுப்ரமணியப்பிள்ளை என்பவரிடம் மிருதங்கம் கற்று, அகில இந்திய வானொலியில் 'ஏ' கிரேடு கலைஞராக பணிபுரியும் கி. ஸ்ரீவத்சா, 1968ஆம் ஆண்டு மியூசிக் அகாடெமி நடத்திய போட்டியில் முதல் பரிசு பெற்றவர். 2000-ல் 'நாதக்கனல்' பட்டம் பெற்ற இவர் ஈமணி சங்கர சாஸ்திரி, எம். சந்திரசேகரன், கே.வி. நாராயணசாமி, மதுரை சோமசுந்தரம், என். ரமணி, வி.வி. சடகோபன், டாக்டர் பாலமுரளிகிருஷ்ணா, லால்குடி ஜெயராமன், எம்.எல். வசந்தகுமாரி போன்ற முக்கியமான இசை மேதைகளுக்கு பக்கவாத்தியம் வாசித்துப் புகழ் பெற்றவர்.



முகவரி:

**கி. ஸ்ரீவத்சா**

4, முதல் மாடி,
15/30, ராஜா தெரு, மந்தவெளி,
சென்னை - 600 028.
தொலைபேசி-65297910
செல்-93810 49190

## ஸ்ரீவத்சா

மிருதங்கக் கலைஞர்



## கிரிஜா பக்கிரிசாமி

பரதநாட்டிய ஆசிரியர்

இசைக்குடும்பத்தில் பிறந்த கிரிஜா பக்கிரிசாமி, ஐந்து வயதில் தன் பாட்டி பிரணம்மாள் அவர்களிடம் நாட்டியம் பயிலத் தொடங்கி, பதினோராவது வயதில் அரங்கேற்றம் செய்தார். பண்டித ஜவஹர்லால் நேரு, டாக்டர் பாபு ராஜேந்திரபிரசாத் ஆகியோர் முன்னிலையில் நடனமாடி பாராட்டும், பரிசும் பெற்றார். 1953–லிருந்து நாட்டியப் பள்ளியினை நடத்தி வருகிறார். இவருடைய மாணவிகளில் ஒருவர்தான் புகழ்பெற்ற அகில இந்திய நடிகை ஹேமாமாலினி ஆவார். இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களாலும், ம.பொ.சி. அவர்களாலும் பாராட்டப்பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.


முகவரி:
கிரிஜா பக்கிரிசாமி
10, முத்துப்பாண்டியன் அவின்யு,
சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-600 004.
தொலைபேசி - 24984671
செல்-9884950000

இயற்கை நிகழ்வான தனது பால்திரிபு நிலையினையும், சமூகத்தின் எண்ணற்ற இன்னல்களையும், தனது தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சியால் வென்று, பரதநாட்டியக் கலைத்துறையில் இன்று உலக அளவில் தனி இடம் பெற்றுள்ளார் செல்வி நர்த்தகி. இறைமையாகிய ஆண்மைக்கு முன் தன்னை நாயகியாகவும், இறைவனையே நாயகனாகவும் பாவித்து பக்தி செய்து, இறையுள் ஐக்கியமாகும் முறையை 'மதுர பக்தி பாவம்' அல்லது 'மாதுர்ய பக்தி' என வழங்குவர்.இத் தத்துவத்தையே தன் நடனத்தின் வாயிலாகப் புதுமையாகவும், அதே சமயம் முறை வழுவாமலும் தெய்வீக நாட்டியமாக வழங்கி வருகின்றார்.

நாட்டியக் கலாநிதி கே.பி.கிட்டப்பா பிள்ளை இவரது ஆசிரியர் ஆவார். மிக நேர்த்தியான 'சக்தி தரிசனம்', தஞ்சை நால்வரின் அபூர்வ நாட்டிய உருப்படிகள் ஆகியவை ரசிகர்கள் மத்தியில் மிகுந்த பாராட்டும், வரவேற்பும் பெற்றுத் தொடர்ந்து அனைத்து மேடைகளிலும் நிகழ்ந்து வருகின்றன. சங்க இலக்கியம் முதல் தற்கால நவீன இலக்கியம் வரை, எளிய தமிழ் இசைப்பாடல்களால் தனது நடனத்தின் மூலம் உலகத்தமிழ் நெஞ்சங்கள் முழுவதும் நிறைந்துள்ளார்.

## திருநங்கை நர்த்தகி நடராஜ்

நாட்டிய-நாடகக் கலைஞர்



முகவரி:
திருநங்கை நர்த்தகி நடராஜ்,
10, ஆனந்த் சரோவரி குடியிருப்பு,
198, கச்சேரி சாலை, சென்னை - 04.
தொலைபேசி - 24660413
செல் - 9444844420

## சிந்தூரி

பரதநாட்டியக் கலைஞர்



முகவரி:
டாக்டர் சிந்தூரி,
18005, பயர்ஸ் அவின்யு,
செரிடோஸ்,
கலிபோர்னியா, சி.ஏ. 90703,
தொலைபேசி - 001562 - 8410504

இளம் வயதிலேயே பரதநாட்டியமும், குச்சுப்புடியும் கற்றுக்கொண்ட சிந்தூரியின் நடன அரங்கேற்றம் நிகழ்ந்தது நடிகர் திலகம் சிவாஜி அவர்களின் தலைமையில். சென்னை இசைக்கல்லூரியில் நாட்டியம் பயின்ற சிந்தூரி கலைமாமணி பக்கிரிசாமிப் பிள்ளையின் மாணவி. குச்சுப்புடியை வேம்பட்டி சின்ன சத்யம் மற்றும் எஸ். சிவா ஆகியோரிடம் கற்றவர். பரதநாட்டியம் மற்றும் குச்சுப்புடியில் உள்ள தத்துவத்தைப் பற்றி ஆய்வு செய்ததற்காக கலிபோர்னியா பல்கலைக்கழகத்திடமிருந்து டாக்டர் பட்டம் பெற்றவர்.

முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களின் குறளோவியத்தைத் தொகுத்து 'திருக்குறள் நவரச நாட்டியம்' என்ற நாட்டிய நாடகத்தை நிகழ்த்தியுள்ள சிந்தூரி உலகம் முழுவதும் ஆடியுள்ள பெருமைக்குரியவர். தற்போது அமெரிக்காவில் 'சாவித்ரி ஆர்ட்ஸ் அகாடெமி ' என்ற நாட்டியப் பள்ளியை நடத்தி வருகிறார்.

## நளினி பாலகிருஷ்ணன்

பரதநாட்டிய ஆசிரியர்



நடன ஆசிரியராக இன்று 37 ஆண்டுகள் அனுபவமுள்ள நளினி பாலகிருஷ்ணன் தனது 5 வயதில் நடனம் பயின்று தனது 9 வயதிலேயே தன்னைவிட மூத்த ஒரு பெண்ணுக்கு நாட்டியம் சொல்லித் தந்து அவரை அரங்கேற்றி 13வது வயதில் சைதாப்பேட்டையில் உள்ள நரிக்குறவர் மாணவர் இல்லத்தில் உள்ள மாணவிகளுக்கு நாட்டியம்சொல்லித் தந்து சாதனை படைத்தவர். சென்னை அரசு இசைக்கல்லூரியின் மாணவி. தற்போது' பால அபிராமி பரதநாட்டிய அகாடமி' என்ற பெயரில் ஒரு பரத நாட்டியப் பள்ளியை நடத்தி வருகிறார்.

முகவரி:
நளினி பாலகிருஷ்ணன், 27/9,
ராகவையா ரோடு,
தி.நகர், சென்னை-600 017.
தொலைபேசி-28158154
செல்-9444150798



திவ்யா கஸ்தூரி

பரதநாட்டியக் கலைஞர்

கணித மேதை ராமானுஜத்தின் வாழ்க்கை வரலாற்றை நாட்டிய நாடகமாக நிகழ்த்தியுள்ள இவர் குறிப்பிடத்தக்க பரதநாட்டியக் கலைஞர். 'நாட்டிய பைரவி', 'யுவகலாபாரதி', 'நாட்டிய கலாப்ரியா', 'யுவகலா விபஞ்சி', முத்தமிழ்ப் பேரவையின் 'நாட்டியச் செல்வம்' ஆகியவை பரதநாட்டியத்திற்காக திவ்யா கஸ்தூரி பெற்றுள்ள பட்டங்களின் பட்டியலில் சில. ஏராளமான நாட்டிய நிகழ்ச்சிகள் வழங்கியிருக்கும் இவருக்கு கர்நாடக சங்கீதத்திலும் ஆர்வம் உண்டு. டி.வி. கோபாலகிருஷ்ணன், ஜானகி ராமானுஜம் போன்றோரிடம் கர்நாடக சங்கீதம் பயிலும் இவர் இலண்டன் நகரில் உள்ள 'இம்பீரியல் சொசைட்டி ஆப் டீச்சர்ஸ்' என்ற அமைப்பில் கதக் நடனத்திற்காக 'கிரேடு-3' தகுதி பெற்றவர்.

முகவரி:
**திவ்யா கஸ்தூரி**
பிளாட் நெ.1-பி, புதிய எண்.11,
2வது தெரு, நேதாஜி நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி - 24897584

சுப்புடுவால் பாராட்டப்பெற்று, கடந்த 35 ஆண்டுகளாக பரதக்கலையைப் பரப்பிவரும் பத்மா சம்பத்குமாரன் பந்தநல்லூர் நாட்டிய பரம்பரையைச் சேர்ந்தவர். இவரின் குரு சொக்கலிங்கம் பிள்ளை மற்றும் நீலா பாலசுப்ரமணியம் ஆகியோர் ஆவர். அமெரிக்க தூதரகப் பள்ளி, ருஷ்ய கலாச்சார மையம் மற்றும் செக்கோவ்ஸ்லோவாக்கியா, பின்லாந்து தேச கலாச்சார மையங்களிலும் நாட்டிய வகுப்புகளை நடத்தி, பரதக் கலையில் ஏராளமான தேர்ச்சிமிக்க மாணவிகளை உருவாக்கித் தந்திருக்கும் இவர் குறிப்பிடத்தக்க ஆசிரியர் மட்டுமல்ல. மைசூர் பல்கலைக்கழகத்தில் தத்துவ இயலில் தங்க மெடல் பெற்றவரும் கூட.

குடியரசுத் தலைவர் மாளிகையிலும், தில்லித் தமிழ்ச் சங்கத்திலும் இவருடைய மாணவிகளின் நிகழ்ச்சிகள் பலமுறை நிகழ்ந்துள்ளன.

முகவரி:
**பத்மா சம்பத்குமாரன்**
சி-2/2/218, ஜனக்புரி,
நியுடெல்லி - 110 058.
தொலைபேசி - 25597512
செல்-98712 16998



பத்மா சம்பத்குமாரன்

பரதநாட்டிய ஆசிரியர்

## முத்தரசி ரவி

நாட்டிய-நாடகக் கலைஞர்

முகவரி :
**ஆர். முத்தரசி**
53/34, ஜெயபாலன் தெரு, வாசுதேவன் நகர்,
ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.
தொலைபேசி-24744364
செல்-98400 33074




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரத்தால் 'நாட்டியச் செல்வம் பட்டம்' பெற்ற முத்தரசி, திரைப்பட இயக்குநர் கலைமாமணி திரு. சொர்ணம், திருமதி. அருள்மொழி தம்பதியரின் மகளாக 1971ஆம் ஆண்டு பிறந்து, 1993ஆம் ஆண்டு கலைவாணர் அவர்களின் மைத்துனர் கலைமாமணி டி.ஏ.துரைராஜ் அவர்களின் மருமகளானவர். முதலில் இக்கலையை, ' குரு திருமதி. சந்திரகலா ஜகந்நாதனிடம் பயின்று, பின்னர் குரு 'கலைமாமணி' வழுவூர் சாம்ராஜ் அவர்களிடம் தேர்ச்சி பெற்றார். 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் மானியம் பெற்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் குரு கலைமாமணி திருமதி இந்திரா ராஜன் அவர்களிடம் நட்டுவாங்கப் பயிற்சி பெற்றுள்ளார்.

நாட்டியக் கலையின் மீதுள்ள நாட்டத்தால் 1997ஆம் ஆண்டு கலைக்கோயில் கலைப் பள்ளியை நிறுவினார். கலைக்கோயிலின் மூலம் பரதநாட்டியப் பயிற்சி அளிப்பதோடு ஏழை எளிய ஆர்வமுள்ள சிறுமியர்க்கு இலவசப் பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளார். இவரிடம் பயின்ற மாணவிகள் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஆகிய நாடுகளில் நடன ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

திருமதி. முத்தரசி ரவி, கலைஞர் அவர்களின் 'குறளோவியம்', 'திருமுக்கூடற்பள்ளு', 'வெற்றிச் சிகரம்', 'வெற்றிப் படிகள்', 'குற்றாலக்குறவஞ்சி', 'மரமோ மரம்' போன்ற பல நாட்டிய நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றியுள்ளார். இவற்றில் மகுடம் சூட்டுவதாக அமைந்தது கலைஞர் அவர்களின் 'சங்கத்தமிழ்' இசை நாட்டிய நாடகம். இந்நிகழ்ச்சி 1997-2000ஆம் ஆண்டுகளில் 150-க்கும் மேற்பட்ட முறை அரங்கேறியுள்ளது. அதன் வெற்றி விழா 2000-ஆம் ஆண்டு சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

## ஆர். தங்கராஜ் (எ) எம்.எல்.ஏ. தங்கராஜ்

நாடக நடிகர்




தஞ்சை மாவட்டம் ஏ. கிளியனூர் என்ற ஊரில் எஸ். ராமுப்பிள்ளை, அலமேலு ஆச்சி இவர்களுக்கு மகனாக 24.7.1932இல் பிறந்த தங்கராஜ் தனது 10 வயது முதல் 15 வயது வரை தெருக்கூத்தில் நடித்துக் கொண்டிருந்தார். பிறகு 1948இல் திருவாரூரில் முகாமிட்டு நாடகம் நடத்திக் கொண்டிருந்த திரு.கே.என்.ரத்தினம் அவர்களின் ஸ்ரீ தேவி நாடக சபாவில் கதாநாயகன் அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டு, கலைஞர் அவர்கள் எழுதிய 'மந்திரி குமாரி', 'ஒரே முத்தம்' போன்ற நாடகங்களிலும் கதாநாயகனாக நடித்தார்.

1964இல் நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகரின் நேஷனல் தியேட்டர்ஸ் நாடகக் குழுவில் சேர்ந்து 'இலங்கேஸ்வரன்','மாலிக்காபூர்','காடக முத்தரையன்' போன்ற நூற்றுக்கணக்கான நாடகங்களில் நடித்துள்ளார்.

சகஸ்ரநாமம் அவர்களின் சேவா ஸ்டேஜ் நாடகக் குழுவில் 'பாஞ்சாலி சபதம்', 'தேரோட்டி மகன்', 'பிரசிடென்ட் பஞ்சாட்சரம்' போன்ற நாடகங்களில் நடித்ததோடு கோமல் சுவாமிநாதனின் ஸ்டேஜ் பிரன்ட்ஸிலும் நடித்திருக்கிறார்.

முகவரி
**ஆர். தங்கராஜ் (எ) எம்.எல்.ஏ. தங்கராஜ்**
1/25, சத்தியமூர்த்தி நகர், அன்பு காலனி,
நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி-24339843
செல்-9841231574



**கவிஞர் இன்குலாப்**

நாடக ஆசிரியர்


'இன்குலாப்கவிதைகள்' 'வெள்ளைஇருட்டு' உட்பட இதுவரை எட்டுகவிதைத் தொகுப்புகள், ஆறு கட்டுரைத் தொகுப்புகள், நான்கு நாடகத் தொகுப்புகள், ஒரு சிறுகதைத் தொகுப்பு இவற்றின் மூலம் தமிழ்க் கவிதை வரலாற்றிலும், தமிழிலக்கிய வரலாற்றிலும் மறக்க முடியாதபடி மகத்தான சாதனையைப் படைத்தவர் இன்குலாப். உலகம் முழுவதும் இவரின் கவிதைக்கு வாசகர்களும், ரசிகர்களும் உண்டு. 'மக்கள் கவிஞர்' என்று கொண்டாடப்படும் இன்குலாப் சென்னை புதுக்கல்லூரியில் 37 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றாலும், தன் கவிதைப் பணியைத் தொய்வின்றி தொடர்பவர்.

'ஔவை', 'குறிஞ்சிப்பாட்டு', 'மணிமேகலை' ஆகிய நாடகங்களின் மூலம் நவீன நாடகத்திற்கு செழுமை சேர்த்தவர். உழைக்கும் மக்களின் உள்ளக் குமுறலை கவிதையாக்கிய மகத்தான கவிதைப் போராளி.

முகவரி :
**கவிஞர் இன்குலாப்**
269, மதுரை மீனாட்சுபுரம்,
அய்யஞ்சேரி சாலை, ஊரப்பாக்கம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 603 202.
செல் - 9444284281


**திருச்சி வி. மூர்த்தி**

நாடக நடிகர்



கடந்த 40 ஆண்டுகளாக 1969ஆம் ஆண்டு முதல், அமெச்சூர் மற்றும் தொழில்முறை நாடகக் கலைஞராக 1000-க்கும் மேற்பட்ட சமூக, சரித்திர, புராண நாடகங்களில் நடித்து வரும் மூர்த்தி குறிப்பாக மத்திய அரசின் சார்பில் நடந்து வரும் இசை - நாடகப் பிரிவு நடத்தும் நாடகங்களில் பங்கு கொண்டு மத்திய, மாநில அரசுகளின் நலத் திட்டங்களை மக்களிடையே சென்று சேரும் வகையில் நகரங்களிலும், கிராமப்புறப் பகுதிகளிலும் மேடை நாடகமாக நடித்துள்ளார். மேலும் திருச்சியில் இருக்கும் 'கலைக்காவிரி' என்னும் நிறுவனத்தின் மூலம் சமூக, வரலாற்று ஒலி-ஒளி நாடகங்களிலும் தொடர்ந்து நடித்து வருகின்றார்.

முகவரி
**திருச்சி வி. மூர்த்தி**
13/4, ராணி இல்லம்,
சவேரியார் கோவில் தெரு, கூனி பஜார்,
பீம நகர், திருச்சிராப்பள்ளி - 620 001.
செல்-9942462066



## முனைவர் இரா. இராசு

நவீன நாடக இயக்குநர்

புதுடெல்லி தேசிய நாடகப் பள்ளியில் நாடகப் பயிற்சிக்கான முதுகலைப் பட்டம் பெற்ற இரா.இராசு நவீன நாடக உலகில் குறிப்பிடத்தக்கவர். முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞரின் தென்பாண்டிச் சிங்கம் தொலைக்காட்சித் தொடரில் கருத்த ஆதப்பனாக நடித்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தவர். ஹாம்லட், நந்தன் கதை, மக்பத், நட்சத்திரவாசிகள், அவுரங்கசீப் போன்றவை இவரின் இயக்கத்தில் உருவான நாடகங்களில் குறிப்பிடத்தக்கவை. உலக நாடக தின விழாவை முன்னிட்டு சமீபத்தில் புதுச்சேரியில் கலைஞரின் 'ஓர் உளியின் ஓசை' என்ற நாடகத்தை இயக்கினார். நாடகக் கலை பற்றி நான்கு நூல்கள் எழுதியுள்ள இரா. இராசு சில திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார். புதுவைப் பல்கலைக்கழகத்தில் நாடகத்துறைப் பேராசிரியராக இருக்கிறார்.

முகவரி:
**பேராசிரியர் இரா. இராசு**
33, அபிநயா வர்ஷினி கலைக்கூடம்,
நாவற்குளம் பிரதான சாலை,
இலாசுப்பேட்டை, புதுச்சேரி - 8.
தொலைபேசி - 0413 - 2654460
செல்- 98438 29426



## ஜி. தேவிப்ரியா (எ) ரமணதேவி

நாடக நடிகை

16 வயதிலிருந்தே நாடகத் துறையில் நடித்துவரும் இவரின் முதல் கலைப்பயணம் பத்மஸ்ரீ கவிஞர் வாலி அவர்களின் நாடகத்தில் துவங்கி, நடிகர் எஸ்.வி. சகஸ்ரநாமம், எம்.என். கண்ணப்பா, வி.எஸ். ராகவன், நடிகை சந்திரகாந்தா ஆகியோரின் நாடகங்களிலும், அமெச்சூர் நாடகங்களிலும், சொந்த நாடகங்களிலும் நடித்துப் புகழ் பெற்றவர்.

இதைத் தவிர லலிதா பத்மினி நாட்டிய நாடகங்களிலும், நடிகை சந்திரகாந்தாவின் நாட்டிய நாடகத்திலும் ராஜ ராஜ சோழனாகவும், 'சிவகாமி சபதம்' நாட்டிய நாடகத்தில் புலிகேசியாகவும் நடித்து, நடிகர் திலகம் சிவாஜி அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

முகவரி
**ஜி. தேவிப்பிரியா(எ)ரமணதேவி**
71-எப், ஜெகதாம்பாள் நிலையம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி - 24661637. செல் - 9840070785

**வி.ஆர். திலகம்**
பழம்பெரும் நாடக நடிகை




2500 மேடை நாடகங்களில் நடித்து சாதனை புரிந்திருக்கும் வி.ஆர். திலகம் 1960இல் எம்.ஜி.ஆர். நாடகக் குழுவில் நடிக்கத் தொடங்கி கே.ஏ. தங்கவேலு, எஸ்.ஏ. அசோகன் நாடக மன்றங்களில் நடித்து தொடர்ந்து 1963-இல் 'ஒருவிரல்' திரைப்படத்தில் கதாநாயகியாக அறிமுகமானார். பின்னர் எஸ். பாலச்சந்தரின் 'நடுஇரவில்', 'பணம் தரும் பரிசு' போன்ற படங்களில் தொடர்ந்து 35 ஆண்டுகளுக்கு மேலாக 350 திரைப்படங்களுக்கும் அதிகமாக நடித்திருக்கிறார்.

கலைஞரின் 'சேரன் செங்குட்டுவன்', 'சாக்ரடீஸ்', 'அனார்கலி' போன்ற நாடகங்களில் நடித்ததைப் பெருமையாக நினைப்பவர்.

முகவரி
**வி.ஆர். திலகம்**
பழைய எண்.23, புதிய எண்.49,
5வது டிரஸ்ட் குறுக்குத் தெரு,
மந்தவெளிப்பாக்கம், சென்னை - 600 028.
தொலைபேசி - 24643577
செல் - 98414 44512

## கோவைத்தம்பி

திரைப்படத் தயாரிப்பாளர்



அரசியலிலும், திரைப்படத் துறையிலும் பிரபலமாக விளங்கும் கோவைத்தம்பியின் திரையுலகப் பயணம் 'பயணங்கள் முடிவதில்லை' (1982) என்ற திரைப்படத்தில் தொடங்கி இன்றுவரை முடியாமல் தொடர்கிறது. இவர் இதுவரை 13 திரைப்படங்களைத் தயாரித்துள்ளார். அதில் பத்துப் படங்கள் வெள்ளிவிழாப் படங்கள். 1980 முதல் 1984 வரை பேரூர் சட்டமன்ற உறுப்பினராகவும், 1980 முதல் 1981 வரை இயல் இசை நாடக மன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

முகவரி:
**கோவைத்தம்பிகோவைத்தம்பி**
38, சாரங்கபாணி தெரு,
தி.நகர், சென்னை - 600 017.
தொலைபேசி - 28343031
செல் - 9840092700

## சி.ஐ.டி. சகுந்தலா

பழம்பெரும் திரைப்பட நடிகை




மாடர்ன் தியேட்டர்ஸ் 'சி.ஐ.டி. சங்கர்' திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்து சி.ஐ.டி.சகுந்தலா என எல்லோராலும் அழைக்கப்பட்டார். பிறகு ஏ.பி.என். அவர்கள் தயாரித்த 'அகத்தியர்', 'ராஜராஜசோழன்', 'ஜஸ்டிஸ் விஸ்வநாத்' படம் இவருக்கு வெற்றிப் படங்களாக அமைந்தது. வில்லி வேடத்திலும், காமெடி வேடத்திலும் 'பாரத விலாஸ்', 'வசந்த மாளிகை', 'வீட்டுக்கு ஒரு பிள்ளை', 'தவப்புதல்வன்', மற்றும் சுமார் 75 படங்ளில் நடித்துள்ளார். எம்.என். நம்பியார் அவர்களின் நாடகத்திலும் மற்றும் பல நாடகக் குழுவிலும் ஏறத்தாழ 700 நாடகங்களுக்கு மேல் நடித்துள்ளார். நாட்டியப் பேரொளி பத்மினி அவர்களுடன் நாட்டிய நாடகத்தில் நடனமாடியுள்ளார். சொந்தமாக நாட்டியக் குழுவையும் வைத்து நடத்தியுள்ளார். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நடன நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்.

முகவரி :
**ஏ. சகுந்தலா (எ) சி.ஐ.டி. சகுந்தலா**
32, பூரம் பிரகாச ராவ் ரோடு, பாலாஜி நகர்,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி - 28133054
செல் - 9840169852

பெரியகுளத்தில் பிறந்த பாலா படித்தது மதுரை அமெரிக்கன் கல்லூரியில். இயக்குநர் பாலுமகேந்திரா அவர்களிடம் உதவியாளராகப் பணிபுரிந்துள்ளார். இவரது முதல் திரைப்படம் 'சேது'. இப்படத்திற்கு தேசிய விருதும், தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதும் கிடைத்தது.

இதுவரை 'சேது', 'நந்தா', 'பிதாமகன்' ஆகிய மூன்று திரைப்படங்களை இயக்கியுள்ளார். தற்போது 'நான் கடவுள்' என்ற திரைப்படத்தை இயக்கி வருகின்றார்.

முகவரி:
**பாலா**
126, விவேகானந்தன் தெரு,
பாஸ்கர் காலனி, சாலிகிராமம், சென்னை - 600 093.
தொலைபேசி - 23760919, செல் - 9383124228




## பாலா

திரைப்பட கதாசிரியர்

## சீமான்

திரைப்பட இயக்குநர்



'பாஞ்சாலங்குறிச்சி', 'இனியவளே', 'வீரநடை', 'தம்பி' ஆகிய நான்கு படங்களை இயக்கியுள்ள சீமான் 'ராசா மகன்', 'பசும்பொன்' ஆகிய படங்களின் கதை வசனகர்த்தா ஆவார். சமூக அக்கறையுள்ள சீமான் தற்போது இயக்கி வரும் திரைப்படம் 'வாழ்த்துக்கள்'.

முகவரி
**சீமான்**
92, வெங்கடேச நகர், 2வது குறுக்குத் தெரு,
விருகம்பாக்கம், சென்னை - 600 092.
செல் - 9444044078

## ரா. பார்த்திபன்
திரைப்பட நடிகர்

இரண்டு முறை தேசிய விருது பெற்றுள்ள ரா. பார்த்திபன் இதுவரை 39 படங்களில் நடித்துள்ளார். இயக்கியப் படங்கள் 10. தயாரித்த படங்கள் 8. 'புதிய பாதை' மற்றும் 'பாரதிக் கண்ணம்மா' திரைப்படங்கள் சிறந்த நடிகருக்கான விருதை இவருக்குப் பெற்றுத் தந்தன. 'கிறுக்கல்கள்' என்ற புத்தகம் பார்த்திபனின் இன்னொரு முகம்.



முகவரி
**ரா. பார்த்திபன்**
எம்-49/பி, டெம்பிள் வியு அபார்ட்மெண்ட்ஸ்,
பி.டி.ராஜன் சாலை,
கே.கே.நகர், சென்னை - 600 078.
தொலைபேசி - 23751170
செல் - 9841188711



## டி.ஆர். சிலம்பரசன்
திரைப்பட நடிகர்


ஆறு மாதக் குழந்தையாக இருந்தபோதே நடிக்கத் துவங்கி, இந்த 23 வயதில் இதுவரை 22 படங்களில் நடித்திருக்கும் டி.ஆர். சிலம்பரசன், தந்தை டி.ராஜேந்தரைப் போலவே திரைப்படத்தின் சகலத் துறைகளிலும் முத்திரை பதித்த துடிப்பான இளைஞர்.

கதாநாயகனாக நடித்த முதல் படம் 'காதல் அழிவதில்லை'. சமீபத்திய படம் 'வல்லவன்'. 'மன்மதன்', 'வல்லவன்' ஆகிய படங்களின் இயக்குநர். இவர் ஒரு பின்னணிப் பாடகரும்கூட.

முகவரி
**சிம்பு (எ) சிலம்பரசன்**
4-ஏ/33, இந்தி பிரச்சார சபா தெரு,
தி.நகர், சென்னை - 600 017.
தொலைபேசி-24344790
செல் - 93810 43921

## ஜெயம் ரவி

**திரைப்பட நடிகர்**



1988இல் தமிழிலும் தெலுங்கிலும் குழந்தை நட்சத்திரமாக நடித்துள்ளார்.

2002இல் 'ஜெயம்' படத்தின் மூலமாக கதாநாயகனாக அறிமுகம் ஆகியுள்ளார்.

2004இல் 'எம். குமரன் S/0 மகாலட்சுமி' படத்தில் சிறப்பாக நடித்ததற்காக தமிழ்நாடு அரசு சிறந்த நடிகருக்கான விருது அளித்து கௌரவித்தது. இவர் ஒரு பரதநாட்டிய கலைஞரும் கூட. இவரின் தந்தை எடிட்டர் மோகன். 1954 முதல் திரைப்படத் துறையில் எடிட்டராகவும் கதாசிரியராகவும், தயாரிப்பாளராகவும் இன்றுவரை சிறந்து விளங்கி வருகிறார்.

முகவரி
**ஜெயம் ரவி**
137, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,
தி.நகர், சென்னை - 600 017.
தொலைபேசி - 28344112
செல் - 9840994998



## விஷால்

**திரைப்பட நடிகர்**

2004இல் வெளியான 'செல்லமே' திரைப்படத்தில் அறிமுகமான விஷால் இதுவரை 'சண்டைக்கோழி' (2005), 'திமிரு' (2006), 'சிவப்பதிகாரம்' (2006), 'தாமிரபரணி' (2007) ஆகிய 5 திரைப்படங்களில் நடித்திருக்கிறார். தற்போது நடித்து வரும் படங்கள் மலைக்கோட்டை, சத்யம்.

முகவரி
**விஷால்**
27, செந்தில் ஆண்டவர் தெரு,
தனலட்சுமி காலனி,
வடபழனி, சென்னை - 600 026.
செல் - 9840537837



## ஜீவா

திரைப்பட நடிகர்

'ஆசை ஆசையாய்' படத்தில் அறிமுகமான ஜீவா. 'ராம்' படத்தின் படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பே, 'தித்திக்குதே' என்ற படத்தில் நடித்து முடித்தார்.

'ராம்' படத்துக்குப் பிறகு டிஷ்யூம், பொறி படங்களில் நடித்திருக்கும் இவர். தற்சமயம் 'தமிழ் எம்.ஏ.,' 'ராமேஸ்வரம்', 'தெனாவட்டு' போன்ற படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

தேசிய விருது பெற்ற இயற்கைப் பட இயக்குநர் ஜனநாதனின் இயக்கத்தில் வெளியான 'ஈ' படம் மிகப்பெரிய வெற்றி பெற்றதோடு, எல்லாவிதமான கதாபாத்திரங்களையும் ஏற்று நடிக்கக் கூடிய நடிகர் என்ற அந்தஸ்தையும் ஜீவாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.


முகவரி
ஜீவா
32, வடக்கு போக் சாலை,
தி.நகர், சென்னை - 600 017.
தொலைபேசி - 28155797


## ஆர். வினித்

குணசித்திர நடிகர்

பரதநாட்டியம், மோகினியாட்டம், குச்சுப்புடி ஆகிய நாட்டியங்களில் தேர்ச்சி பெற்ற வினித், டாக்டர் பத்மா சுப்ரமணியத்தின் மாணவர். 1985இல் எம்.டி. வாசுதேவன் நாயரின் எழுத்தாக்கத்தில் உருவான 'நகஷதங்கள்' என்ற மலையாளத் திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர். மலையாள சினிமாவின் முக்கிய இயக்குநர்களைப் போலவே தமிழ்ச் சினிமாவிலும் சாதனை படைத்த இயக்குநர்களின் படங்களில் நடித்தவர். தமிழில் வினித் நடித்த படங்களில் குறிப்பிடத்தக்கவை 'ஆவாரம்பூ', கலைஞரின்'பாசக்கிளிகள்'.

முகவரி
வினித்
2, டாக்டர் முனியப்பா ரோடு,
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைபேசி - 26613324,
செல் - 98400 46002





## நவ்யா நாயர்

நடிகை

தமிழ், மலையாளம் உட்பட இதுவரை 36 படங்களில் நடித்துள்ள நவ்யா நாயர் தான் நடித்த முதல் படமான 'நந்தனம்' என்ற திரைப்படத்திற்கு கேரள அரசின் விருதோடு 'ஃபிலிம்பேர்' விருதும், 'மாத்ருபூமி'போன்ற பத்திரிகைகளின் விருதுகளை தன் நடிப்பாற்றலால் பெற்றவர். 'அழகிய தீயே' திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான நவ்யா நடித்த குறிப்பிடத்தக்க தமிழ்ப் படங்கள் கலைஞரின் 'பாசக்கிளிகள்', சேரனின் 'மாயக்கண்ணாடி'.

முகவரி
**நவ்யா நாயர்**
நந்தனம், முதுகுளம் வடக்கு,
செப்பேடு அஞ்சல் - 690 507,
ஆலப்பி மாவட்டம், கேரளா,
தொலைபேசி - 9447007007


## த்ரிஷா

நடிகை

நூற்றுக்கணக்கான விளம்பரப் படங்களில் நடித்துள்ள த்ரிஷா சென்னை எத்திராஜ் கல்லூரி மாணவி. இவர் இதுவரை நடித்துள்ள படங்களின் எண்ணிக்கை தமிழ், தெலுங்கு எல்லாவற்றையும் சேர்த்து 23. பிலிம்பேர் விருதினை இரண்டு முறையும், ஆந்திர அரசின் 'நந்தி' விருதினை ஒரு முறையும் தன் சினிமா சாதனைகளுக்காகப் பெற்றுள்ளார். த்ரிஷாவின் முதல் படம் 'லேசா... லேசா...' சமீபத்திய படம் 'கிரீடம்'.

முகவரி
**த்ரிஷா**
26, செனடாப் ரோடு, 2வது சந்து,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி - 24353206
செல் - 9840299299





2004-ஆம் ஆண்டு சிறந்த திரைப்பட இசையமைப்பாளருக்கான தேசிய விருதைப் பெற்றுள்ள வித்யாசாகர் இதுவரை 200 திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார். தமிழ்-90, தெலுங்கு-75, மலையாளம்-40, கன்னடம்-3, இந்தி-2, பத்துக்கும் மேற்பட்ட இசைக்கருவிகளை வாசிக்கத் தெரிந்த வித்யா சாகர் கேரள, ஆந்திர மாநில அரசின் விருதுகளைப் பலமுறை பெற்றுள்ளார். ஒரு ஹாலிவுட் திரைப்படத்திற்கு இசையமைத்த முதல் தென்னிந்தியர் என்ற பெருமையை இவருக்குத் தருகிறது 'Beyond the soul' என்ற ஆங்கிலத் திரைப்படம்.


முகவரி :
**வித்யாசாகர்**
30, வெங்கட்ராமன் தெரு,
தி.நகர், சென்னை - 600 017.
தொலைபேசி - 28150280

**வித்யாசாகர்**
இசையமைப்பாளர்

**கபிலன்**
பாடலாசிரியர்

அறுநூறுக்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களையும், ஆறு கவிதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளவர் கபிலன். இவரின் 'தெரு ஓவியம்' என்ற கவிதை நூலுக்காக கவிஞர் சிற்பி அறக்கட்டளை விருதினைப் பெற்றுள்ளார். 2003-ஆம் ஆண்டு சிறந்த திரைப்படப் பாடலாசிரியருக்கான விருதையும் பெற்றுள்ள கபிலன் சென்னை நகர சேரிப் பாடல்களைப் பற்றி எம்.ஃபில் செய்து வருகிறார்.

முகவரி :
**கபிலன்**
எச்.24, எம்.எம்.ட.ஏ. காலனி
அரும்பாக்கம், சென்னை - 600 106
செல் - 9840068941





ஐநூறு திரைப்படங்களில் ஆயிரம் பாடல்களுக்கு மேல் எழுதியுள்ள நா.முத்துக்குமார் கவிதை, உரைநடை என பத்து நூல்களின் ஆசிரியர். பச்சையப்பன் கல்லூரி மாணவர். தமிழ்த் திரைப்படப் பாடல்கள் குறித்து ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். இவரின் குறிப்பிடத்தகுந்த கவிதை நூல்கள் 'பட்டாம்பூச்சி விற்பவன்', 'நியூட்டனின் மூன்றாம் விதி', 'குழந்தைகள் நிறைந்த வீடு' , 'அ'னா 'ஆ'வன்னா.


முகவரி :
**நா. முத்துக்குமார்,**
பிரஜ்வால் சாரதா அபார்ட்மெண்ட்ஸ்,
பிளாட் - 'ஏ', தரைத்தளம்,
21, கலைஞர் கருணாநிதி சாலை,
சாலிகிராமம், சென்னை - 600 092.
செல் - 94443 66660


**நா. முத்துக்குமார்**
பாடலாசிரியர்

**பா. விஜய்**
திரைப்படப் பாடலாசிரியர்

2004 ஆம் ஆண்டு திரைப்படப் பாடலுக்காக தேசிய விருது பெற்றுள்ள பா. விஜய் இதுவரை 33 புத்தகங்களை எழுதி வெளியிட்டு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 'வித்தகக் கவிஞர்' என்று பாராட்டப் பெற்றவர். 400 திரைப்படங்களில் சுமார் 900-க்கும் அதிகமான பாடல்களை எழுதியுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றுள்ள பா.விஜய் இதுவரை 30-க்கும் மேற்பட்ட விருதுகளையும் பெற்றுள்ளார்.

முகவரி :
**பா. விஜய்**
3-10ஏ, 3வது தெரு, ஸ்ரீராகவேந்திரா நகர்,
நெசப்பாக்கம், சென்னை - 600 089.
செல் - 98410 38790





## கஞ்சா கருப்பு

திரைப்பட நகைச்சுவை நடிகர்

இயக்குநர் பாலாவின் 'பிதாமகன்' மூலம் அறிமுகமான கஞ்சா கருப்பு அமீரின் 'ராம்', 'பருத்தி வீரன்', சண்டைக்கோழி', 'தாமிரபரணி', 'சிவப்பதிகாரம்', 'திருப்பதி' போன்ற திரைப்படங்களில் நடித்திருக்கிறார்.

முகவரி
**கஞ்சா கருப்பு**
8, சீனிவாசன் தெரு, சாலிகிராமம்,
சென்னை - 600 093.
செல் - 9444010407

## இரா. ஆர்த்தி

நகைச்சுவை நடிகை

தனது மூன்று வயது முதலே நடிக்கத் துவங்கிய ஆர்த்தி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் 63 படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்துள்ளார்.

சின்னத்திரையிலும் சுமார் 5 வருட காலமாகத் தொடர்ந்து நகைச்சுவை வேடங்களில் நடித்து வருகிறார்.

கல்லூரி நாட்களில் படிப்பிலும், நாட்டியத்திலும் முழு கவனம் செலுத்துவதுடன் சமூக சேவைகளிலும் பல்வேறு பதவிகளை (லியோ கிளப்) (அரிமா சங்கம்)) வகித்து பல நல்ல உதவிகளைப் புரிந்து வருகிறார்.



முகவரி:
**ஆர். ஆர்த்தி**
29, எஸ்-3, என்.ஆர்.பிளாட்ஸ்,
அழகிரி நகர் 6வது குறுக்குத் தெரு,
100 அடி சாலை, வடபழனி, சென்னை - 600 026.
தொலைபேசி - 24720811, செல் - 93827 44745

## பாம்பே ஜெயஸ்ரீ

**பின்னணிப் பாடகி**



லால்குடி ஜெயராமன், டி.ஆர். பாலாமணி போன்ற இசைமேதைகளிடம் கர்நாடக இசையின் சகல நுட்பங்களையும் கற்றுத் தேர்ந்த பாம்பே ஜெயஸ்ரீ இன்று கர்நாடக சங்கீதத்தில் மட்டுமல்ல திரைப்படப் பாடல்களிலும் கொடி கட்டிப் பறப்பவர். பறப்பவர் என்றால் உண்மையிலேயே பறப்பவர். உலகம் முழுவதும் கச்சேரிகளுக்காக பறந்துகொண்டே இருக்கிறார். உலகம் முழுவதும் உள்ள முக்கியமான இசைக் கலைஞர்களோடு இசை குறித்து விவாதித்து தன் இசைக்கான புதிய புதிய திசைகளைத் தேடி வருவதோடு இசை குறித்த ஆவணப் படங்களுக்கும், தன்னுடைய இசை ஆல்பங்களுக்கும் இசையமைத்து வருபவர். தர்பானில் உள்ள 'ஒப்பேரா ஹவுஸ்' மற்றும் 'ருஷ்யன்' 'ஒப்பேரா ஹவுஸ்' போன்ற முக்கியமான இசையரங்குகளில் பாடிய முதல் கர்நாடக சங்கீதப் பெண்மணி என்ற பெருமைக்குரியவர்.

முகவரி :
**பாம்பே ஜெயஸ்ரீ**
பிளாக்-2, பிளாட்-1ஏ, தரங்கினி குடியிருப்பு,
3வது கடற்கரை சாலை,
வால்மீகி நகர், சென்னை - 600 041.
தொலைபேசி - 42158609
செல் - 9884087520

## திப்பு
பின்னணி பாடகர்



தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் சுமார் 2300 பாடல்கள் பாடியுள்ள பாடகர் திப்பு சின்ன வயதில் வயலின் கற்றுக் கொண்டார். 17வது வயதில் கண் அறுவை சிகிச்சை பெற்று வீட்டில் ஓய்வெடுத்த சூழலில் குரலிசையில் ஆர்வம் ஏற்பட்டு சேகர் நாராயணன், டி.எஸ். முரளீதரன் ஆகியோரிடம் இசை பயின்றார். விளம்பரப் படங்களில் பாடிவந்த இவருக்கு ஏ.ஆர். இரகுமானின் 'புக்கர்' என்ற இந்திப்படம் திரை உலகக் கதவுகளைத் திறந்து விட்டது. திரைப்படங்களில் பாடுவதோடு இல்லாமல் சில இசை ஆல்பங்களையும் வெளியிட்டுள்ளார்.

முகவரி:
**திப்பு**
பிளாட் நெ.10, 28/9, திலகர் தெரு,
ஏ.ஜி.எஸ். காலனி, ஆழ்வார்திருநகர்,
சென்னை - 60 0 087.
தொலைபேசி - 24865721
செல் - 98400 60109

## மதுபாலகிருஷ்ணன்
பின்னணிப் பாடகர்



தன் குழந்தைப் பருவத்திலேயே பிரபல இசை மேதைகள் ஸ்ரீதேவி, சந்திரன் நாராயணன் நம்பூதிரி போன்றோரிடமும், பின்னர் டி.வி. கோபாலகிருஷ்ணன், மணி கிருஷ்ண சர்மா, வேதவல்லி போன்ற இசை மேதைகளிடமும் இசை பயின்ற மதுபாலகிருஷ்ணன் 120 மலையாளத் திரைப்படங்களிலும், 100 கன்னடத் திரைப்படங்களிலும், 50 தெலுங்குத் திரைப்படங்களிலும், 75 தமிழ்ப் படங்களிலும் என இதுவரை சுமார் 1200 பாடல்கள் பாடி சாதனை புரிந்துள்ளார். இளையராஜாவின் 'திருவாசகம்' ஒலிப்பேழைக்கும் பாடியிருக்கிறார். கேரள அரசின் விருதையும், மகாத்மா காந்தி கல்வி அறக் கட்டளை உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

முகவரி:
**மதுபாலகிருஷ்ணன்**
'மாதவம்', அஜந்தா காம்ப்ளக்ஸ்,
கண்ணன் குளங்கரா,
திருப்பூனித்துரா அஞ்சல்,
கொச்சின் - 682 301, கேரளா
தொலைபேசி - 0484-2782088
செல் - 98470 37083

1967இல் 'பக்தபிரகலாதா' என்ற தெலுங்குத் திரைப்படத்தின் மூலம் எடிட்டராக அறிமுகமான விட்டல் இதுவரை 150 படங்களுக்கு எடிட்டராகப் பணியாற்றியிருக்கிறார். இவர் முதன் முதலில் ஏ.வி.எம். ஸ்டுடியோவில் எடிட்டிங் அப்ரன்டீசாகச் சேர்ந்தது 12.9.1954. உதவி எடிட்டராக இவர் முதலில் வேலை செய்த எடிட்டர்கள் எம்.வி. ராமன், எஸ். சூர்யா, கே. சங்கர், பஞ்சு (கிருஷ்ணன்-பஞ்சு) இயக்குநர் திரு. எஸ்.பி. முத்துராமன் அவர்களிடம் மட்டும் மொத்த படங்கள்-71, ஏ.வி.எம். புரடக்ஷன்ஸ் 40 படங்கள் மற்ற இயக்குநர்களான திரு.சி.எச்.நாராயணமூர்த்தி, டி. யோகானந்த், பட்டாபிராமன் (பட்டு), புட்டண்ணா கனகல், கிருஷ்ணன் நாயர், ராஜசேகர், எல். ராஜா ஆகியோரின் படங்கள். ரஜினிகாந்த் படம் மட்டும் 34 எடிட் செய்திருக்கிறார். இவர் டைரக்ட் செய்த படங்கள் - 6, இவர் தயாரித்த படங்கள் - 4.



முகவரி :
**ஆர் . விட்டல்**
8-பி, திரைப்பட இயக்குநர்கள் காலனி,
கோடம்பாக்கம், சென்னை - 600 0234.
தொலைபேசி - 24734422
செல் - 94440 55144

**ஆர். விட்டல்**
**திரைப்பட எடிட்டர்**

**எம்.வி. பன்னீர்செல்வம்**
**திரைப்பட ஒளிப்பதிவாளர்**




1985-88ஆம் ஆண்டில் சென்னை திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவு பயின்று அந்த வருடத்தின் சிறந்த மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரபல ஒளிப்பதிவாளர் திரு.பாலுமகேந்திராவிடமிருந்து அதற்கான விருதைப் பெற்ற எம்.வி. பன்னீர்செல்வம் பணியாற்றிய முதல் படம் சுகமான சுமைகள் (1992).

மொத்தப் படங்கள் - சுமார் 30, விளம்பரப் படங்கள் - 20

ஆவணப் படங்கள் - 5, ஒளிப்பதிவு செய்த படங்களில் சில...

சுகமான சுமைகள் , செம்பருத்தி, மக்கள் ஆட்சி, உள்ளே வெளியே , ஆயுத பூஜை, ஹவுஸ் ஃபுல் ரோஜாக் கூட்டம், ஏப்ரல் மாதத்தில் , சொக்கத்தங்கம், பேரரசு, பாசக்கிளிகள், கிழக்குக் கடற்கரைச் சாலை.

முகவரி :
**எம்.வி. பன்னீர்செல்வம்**
17/2, இந்திரா காலனி முதல் தெரு,
அசோக் நகர், சென்னை - 600 083.
செல் - 9841044232



## அதிவீரபாண்டியன்

**திரைப்பட பத்திரிகை ஆசிரியர்**

தூத்துக்குடியை அடுத்த குலையன்கரிசல் என்னும் கிராமத்தில் மிகவும் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த அதிவீரபாண்டியன் ஆரம்பத்தில் நாடகங்களில் ஆர்வம் காட்டி 'உயிர்ப்போர்', 'மும்முனை மூவர்', 'நான் யார்' போன்ற சுயமரியாதை கொள்கை விளக்க நாடகங்களை எழுதி, அவரது பாண்டியன் நாடக மன்றம் மூலம் பல இடங்களில் நடத்தினார்.

தினத்தந்தி நாளிதழில் நிருபராகப் பணியில் சேர்ந்து பின்பு 1962ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 35 ஆண்டுகள் தினத்தந்தியின் சினிமா ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

3 ஆயிரம் திரைப்படங்களுக்கு மேல் விமர்சனம் எழுதியதுடன் தமிழ்த் திரையுலகின் புகழ்பெற்ற நடிகர்கள், நடிகைகள், இசையமைப்பாளர்கள், பாடல் ஆசிரியர்கள், இயக்குநர்கள், ஒலி, ஒளிப்பதிவாளர்கள், ஏனைய தொழில்நுட்பர்கள், பட அதிபர்கள் பற்றிய செய்திகள், பேட்டிகளையும் எழுதியிருப்பதுடன் சினிமா சம்பந்தப்பட்ட ஆயிரக்கணக்கான கேள்விகளுக்குப் பதில் எழுதியதுடன் ஏராளமான கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

முகவரி :
**து. அதிவீர பாண்டியன்**
12, 4வது தெரு (கிழக்கு), பிரயன்ட் நகர்,
தூத்துக்குடி - 628 008.
தொலைபேசி - 0461-2377537

## நேஷனல் செல்லையா

**புகைப்படக் கலைஞர்**



அறிஞர் அண்ணா அவர்கள் ஏ.வி.எம். நிறுவனத்தின் 'ஓர் இரவு' திரைப்படத்திற்கு திரைக்கதை வசனம் எழுதுவதற்காக ஏ.வி.எம். படப்பிடிப்பு நிலையத்திற்கு வந்தபோது அவருக்கு அருகிருந்து பணிவிடை செய்யும் பாக்கியம் பெற்றவர் நேஷனல் செல்லையா. இவரின் உணர்வுபூர்வமான செயல்பாடுகளைக் கண்ட அண்ணா அவர்கள் தமது பணிகள் முடிந்து செல்லும்போது அவருக்கே உரிய விசாலமான மனதோடு செல்லையாவைப் பார்த்து ''இந்த ஸ்டுடியோவில் எத்தனையோ துறைகள் இருக்கையில் நீ ஏன் இந்த எடுபிடி வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டுவிட்டுச் சென்றார். அண்ணாவின் கேள்வி இவர் நெஞ்சில் நெருப்புப் பொறிகளை மூட்டியது. அந்த வெளிச்சத்தில் உதித்த யோசனைதான் புகைப்படக் கலைஞனாக வேண்டுமென்பது. அண்ணாவின் அன்பினால் வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் எத்தனையோ ஆயிரம் பேர். அண்ணாவின் ஒரு கேள்வியே ஒருவரின் வாழ்க்கை உயர்த்தியது என்றால் அது நேஷனல் செல்லையாதான். நேஷனல் செல்லையா புகைப்படக் கலைஞராகப் பணியாற்றிய 400வது படம் ரஜினிகாந்தின் 'பாட்ஷா'.

முகவரி :
**நேஷனல் செல்லையா**
4/17, 3வது குறுக்குத் தெரு,
வேங்கீஸ்வரர் நகர், வடபழனி, சென்னை - 600 026.
தொலைபேசி - 24841729, செல் -94444 04136



**எம்.டிராட்ஸ்கி மருது**

ஓவியக் கலைஞர்

1970-77 வரை சென்னைக் கலைத்தொழிற் கல்லூரியில் ஓவியம் படித்து முதல் மாணவராகத் தேறினார். பின் அச்சுக்கலையில் 1978இல் டெல்லியில் பயிற்சி பெற்றார்.

1977இல் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் அந்த ஆண்டுக்கான சிறந்த ஓவியர் விருதும், பாராட்டும் இவருக்குக் கிடைத்தது.

1978லிருந்து ஒன்பது ஆண்டுகள் மத்திய அரசின் நெசவாளர் பணி மையத்தில் டிசைனராக விஜயவாடாவிலும் சென்னையிலும் பணி செய்தார்.

1975ஆம் ஆண்டிலிருந்தே நாடு முழுவதும் நடைபெறுகிற பல்வேறு ஓவியக் கண்காட்சிகளிலும், ஓவியப் பட்டறைகளிலும், முகாம்களிலும் பங்கு பெற்றவர்.

1990லிருந்து திரைப்படத்துறை ‘கலை இயக்குநராக’, ஸ்பெஷல் எபெக்ட் இயக்குநராகவும் பல திரைப்படங்களுக்குப் பணிபுரிந்து வருகிறார்.

பங்களித்த திரைப்படங்களில் சில ‘தேவதை’, ‘அசுரன்’, ‘ராஜகாளிஅம்மன்’, ‘பாளையத்து அம்மன்’, ‘நகேஷ்வர்’, ‘சாசனம்’, ‘ஜமீலா’, ‘நைனா’.

முகவரி :
எம். டிராட்ஸ்கி மருது,
3-டி பிளாக், 3வது தளம்,
30, பழைய டவர் பிளாக்,
நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி - 24350817
செல் - 98840 22655

1980-ஆம் ஆண்டு மணப்பாறை தாலுக்கா, கோவில்பட்டி கிராமத்தில் தவத்திரு டி.டி.சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய புராண நாடகங்கள் பயில்வதற்குச் சென்ற வி.பி. ஜெநாதன் அங்கு மறைந்த முத்துராமலிங்கத் தேசிகர் அவர்களிடம் மாணவனாகச் சேர்ந்து முறைப்படி நாடகம் கற்றுக்கொண்டார்.

பிறகு கரூரில் 1981 முதல் 1984 வரை கரூர் நடிகர் சங்கத்தில் சேர்ந்து நாடங்களில் நடித்தார். 1984-லிருந்து இன்று வரை புதுக்கோட்டை நாடக நடிகர் சங்கத்தில் சேர்ந்து நாடகங்களில் நடித்து வருகின்றார். சுமார் 5 மாவட்டங்களில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் நாடகம் நடித்து அந்தப்பகுதி மக்களின் ஏகோபித்த ஆதரவினைப் பெற்றுள்ளார்.



## வி.பி. ஜெகநாதன்

**இசை நாடக நடிகர்**

முகவரி:
**வி.பி. ஜெகநாதன்**
எஸ்.புதூர் பாரி வள்ளல் ஒன்றியம்,
கட்டையம்பட்டி, வாராப்பூர் அஞ்சல் - 630 410 ,
திருபத்தூர் வட்டம், சிவகங்கை மாவட்டம்,
தொலைபேசி - 04577 - 2244366
செல் -94434 56591



## சீதாலட்சுமி (எ) ஜி.எம். சித்திரைச்செல்வி

**இசை நாடக நடிகை**

பாரம்பரிய இசை நாடகக் குடும்பத்தில் பிறந்தவர் சீதாலட்சுமி. இவரது தாத்தா செந்திவேல் தேசிகர் ராஜ நடிகர் . இவரது தந்தை எம்.எஸ். கெங்காதரன் துணை ராஜ நடிகர். இவர்கள் வழியில் முதன்முதலில் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய பவளக்கொடி நாடகத்தில் ஏ.எஸ். தங்கவேல் அவர்களை குருவாக ஏற்று, சிறு வயதில் புலேந்திரன் வேடம் ஏற்று நடத்தார். பிறகு, 1983ஆம் ஆண்டு, ஸ்ரீ வள்ளி திருமணம், 'பவளக்கொடி', 'சத்தியவான் சாவித்திரி' ஆகிய நாடகங்களில் நாரதர், கிருஷ்ணர் வேடங்கள் ஏற்று நடித்தார். தமிழ்க் கடவுள் முருகனுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய 'ஸ்ரீவள்ளி திருமணம்' நாடகத்தில் எஸ்.டி. ரவிச்சந்திரன் அவர்களைக் குருவாக ஏற்று ஸ்ரீவள்ளியாக (ராஜ நடிகை) வேடம் ஏற்று தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், கிராம ஆலயங்களிலும் நடித்து வருகிறார்.

முகவரி:
**சீதாலட்சுமி (எ)**
**ஜி.எம். சித்திரைச்செல்வி**
5378/2, நிஜாம் காலனி மெயின் ரோடு,
ஜான்சி காம்ப்ளக்ஸ், புதுக்கோட்டை - 1.
செல் -98424 19611



இவர் தனது தந்தை சுப்பிரமணிய நாட்டாரிடமும் மற்றும் மதுரை தக்கால் தெரு பொன்னுதேவரிடமும் பயிற்சி பெற்று தனது 6வது வயதில் ‘கரகம்’, ‘காவடி’, ‘குடக்கூத்து’ கலைளை நன்கு பயின்று முறைப்படி அரங்கேற்றம் ஆகி பல்வேறு கிராமங்களிலும் கலை நிகழ்ச்சி செய்து வந்தார். இக்கலையின் மூலமாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் சென்று கலை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். தமிழகத்தில் சுமார் 200 மாணவ மாணவிகளுக்குத் தன்னுடைய குட கூத்துக் கலையைப் பயிற்சி அளித்துள்ளார்.

## எஸ். பெரியசாமி நாட்டார்

கரகக் கலை ஆசிரியர்

முகவரி:
**எஸ். பெரியசாமி நாட்டார்**
கழுமங்கலம் அஞ்சல்,
(வழி) பூதலூர், தஞ்சாவூர் மாவட்டம்.

## ஆக்காட்டி ஆறுமுகம்

நாட்டுப்புற இசைக் கலைஞர்



1989ஆம் ஆண்டு ஒரு சிறிய கிராமியக் கலைக்குழுவைத் தொடங்கி இன்று வரை சுமார் 2000க்கும் அதிகமான மேடை நிகழ்ச்சிகளைச் செய்துவரும் ஆக்காட்டி ஆறுமுகத்திற்கு அவருடைய தந்தை தான் குருநாதர். அவரைப் பார்த்துதான் இவர் பாடக் கற்றுக்கொண்டார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பாகவும், தமிழக கலை பண்பாட்டுத்துறையின் சார்பாகவும், தென்னக கலை பண்பாட்டு மையத்தின் சார்பாகவும் பல நிகழ்ச்சிகளைச் செய்திருக்கிறார். அந்தமான், மும்பை, இமாச்சலப் பிரதேசம் போன்ற வெளிமாநிலங்களில் கலை நிகழ்ச்சிகளைச் செய்திருக்கிறார்.

கலை ஆர்வலர் எஸ்.ஏ.பெருமாள் அவர்கள் மூலமாகக் கிடைத்த ‘ஆக்காட்டி’ என்று தொடங்கும் ஒரு பாடல் மக்கள் மத்தியிலே இவருக்கு ஓர் நல்ல பிரபலத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இவருடைய இயற்பெயர் ஆறுமுகம் என்று இருந்தாலும், இந்தப் பாடலுடைய முதல் வரியோடு சேர்த்து மக்கள் இவரை ஆக்காட்டி ஆறுமுகம் என்று அழைத்து வருகிறார்கள்.

முகவரி:
**ஆக்காட்டி ஆறுமுகம்**
9,158, பாப்பா வயல் தெரு, திருமயம் அஞ்சல்,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 507.
தொலைபேசி - 04333-274005, செல் - 9443073019

## கே. அம்மச்சி

கரகாட்டக் கலைஞர்

முகவரி :
கே. அம்மச்சி
விராமதி அஞ்சல் - 630 212,
கீழச்செவல்பட்டி வழி,
திருப்பத்தூர் வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.
தொலைபேசி - 04577-265089



திரு. சேதுத்தேவருக்கும், திருமதி. மாரியம்மாள் அவர்களுக்கும் பிறந்தவர் அம்மச்சி. இவருக்கு வயது 64. தன் சிறு வயதில் தந்தை சேது அவர்களால் முறையாக கரகாட்டம் கற்பிக்கப்பட்டு தமிழகத்தின் கலையான கரகாட்டக் கலைஞர் என உருவானவர்.

மதுரை, திருநெல்வேலி, தஞ்சை, சிவகங்கை, திருச்சி, இராமநாதபுரம் என அனைத்து மாவட்டங்களிலும் நிகழ்த்தப் பெறும் கிராம விழாக்களில் இவர் ஆடாத நிகழ்ச்சி இல்லை என்னுமளவுக்கு சிறப்புப் பெற்றுத் திகழ்கிறார்.

தமிழ் பல்கலைக்கழகம், மதுரை, காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் நாட்டுப்புற ஆராய்ச்சியாளர்கள் பலருக்கும் கரகாட்டம் மற்றும் நையாண்டி மேள இசை மற்றும் தாள நடைகள் பற்றிய தரவுகள் மற்றும் தகவல்கள் அளித்து வரும் தரமிக்க கலைஞர் இவர்.

பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் நாட்டுப்புறக் கலைப் பாடத்துக்குப் பலமுறை பயிற்சி ஆசிரியையாக விளங்கி வருகிறார்.

மத்திய அரசின் நேரு யுவகேந்திரா அமைப்பின் அழைப்பில் பல மாநிலங்களுக்கும் சென்று கரகாட்டம் ஆடிப் பெருமை சேர்த்தவர்.

## முனைவர் க.அ. குணசேகரன்

நாட்டுப்புற இசை ஆய்வாளர்



நாட்டுப்புறவியல் துறையில் ஆய்வு செய்து மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி தற்போது புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் முதுநிலைப் பேராசிரியராக (நாடகத்துறை) பணியாற்றி வருகிறார்.


முதுகலை தமிழ் இலக்கியம் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற இவர் தமிழ் இலக்கியம், நாடகவியல், நாட்டுப்புறவியல், தலித்தியம், இசைத்துறை போன்ற துறைகளில் 25 நூல்களும், எழுபதுக்கும் மேல் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவரது 'நாட்டுப்புற மண்ணும் மக்களும்' எனும் நூலுக்குச் சிறந்த நுண்கலை நூலாசிரியர் விருது தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வருகை தரு பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

மனோன்மணியம் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் போன்றவைகளில் இவர் எழுதியுள்ள நூல்கள் இளங்கலை, முதுகலை படிப்புகளுக்கும் பாட நூல்களாக உள்ளன.

'தலித் அரங்கியல்', 'சேரிப்புறவியல்' போன்ற நூல்கள் வழி புதிய கருத்தியல்களைத் தமிழுக்குத் தந்துள்ளார். பன்னிரண்டு ஆய்வு மாணவர்கள் இவரது நெறிகாட்டுதலில் முனைவர் பட்டங்கள் பெற்றுள்ளனர்.

'தன்னானே', 'மண்ணின் பாடல்கள்', 'வயலோரப்பாட்டு', 'பறைமுழக்கம்', 'மனுசங்கடா' போன்ற பல ஒளிநாடாக்களை வெளியிட்டுள்ளார். 'அழகி', 'தேவதை', 'பாரதி', 'கொஞ்சிப்பேசலாம்', பள்ளிக்கூடம்', போன்ற தமிழ்த் திரைப்படங்களில் பாடியும், நடித்தும் பங்களிப்புச் செய்துள்ளார்.

முகவரி:
முனைவர் க.அ. குணசேகரன்
81, 'தன்னானே' இல்லம்,முதன்மைச் சாலை, பாரதி நகர்,
புதுச்சேரி - 605 008. தொலைபேசி - 0413-2236417,செல் -98940 23641




## வேணு அரவிந்த்

சின்னத்திரை நடிகர்

பள்ளி, கல்லூரி நாட்களில் சென்னை தொலைக்காட்சி தயாரிப்புகளில் நடிக்கத் துவங்கி தனியார் தொலைக்காட்சித் தொடர்களில் இதுவரை 2500 எபிசோட்களில் பங்குபெற்றுள்ள இவர் இயக்குநர் பாலச்சந்தர், பாலுமகேந்திரா, போன்ற இயக்குநர்களின் படைப்பில் முக்கிய பாத்திரமேற்று நடித்துள்ளார். 'இரண்டாம் சாணக்யன்', 'வாழ்க்கை', 'அலைகள்', 'செல்வி', 'அரசி', 'கதை நேரம்', 'அக்னிசாட்சி' ஆகிய தொடர்களில் நடித்துள்ளார். மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் நிறுவனத்தில் நான்கு முறை சிறந்த நடிகர் விருது பெற்றுள்ளார்.

முகவரி :
**வேணு அரவிந்த்**
1, 65வது தெரு, 12வது அவின்யு,
அசோக் நகர், சென்னை - 600 083.
தொலைபேசி - 24892078
செல் -98400 90123



## போஸ் வெங்கட்

சின்னத்திரை நடிகர்

ஆட்டோ ஓட்டுநராக 1995இல் சென்னை வாழ்வைத் துவங்கிய இவர், அறிமுகமான தொடர் 'மெட்டி ஒலி'.அறிமுகமான திரைப்படம் 'ஈரநிலம்' (2003). கதாநாயகனாக அறிமுகமானது டாக்டர் கலைஞரின் 'கண்ணம்மா'. வெளியான திரைப்படங்களில் சில 'தலைநகரம்', 'நாளை', 'சிவாஜி' (தமிழ்), 'பந்தயக்குதிரை' (மலையாளம்). ஒளிபரப்பான இதர தொலைக்காட்சி தொடர்களில் சில 'செல்வி', 'ஆட்டோசங்கர்', தற்போதைய திரைப்படங்களில் சில 'மருதமலை', 'தாம் தூம்', 'பத்துபத்து', 'கை', 'சூர்யா'.

முகவரி:
**போஸ் வெங்கட்**
5/15, கலா பிளாட்ஸ், முதல் தளம், ஆர்.கே. சண்முகம் சாலை,
கே.கே.நகர், சென்னை - 600 078.
தொலைபேசி - 24863636, செல் - 94441 36727

## கே. பாலாசிங்

சின்னத்திரை குணசித்திர நடிகர்

கலைத்துறையில் ஏற்பட்ட ஈடுபாடு காரணமாக தேசிய நாடகப் பள்ளியின் நாடக விரிவாக்கத் திட்டத்தின் கீழ் பி.வி. காரந்த் அவர்களின் மேற்பார்வையில் 70 நாட்கள் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நாடகப் பயிலரங்கில் பங்கேற்றவர். முதல்வர் கலைஞர் அவர்களின் கதை வசனத்தில் கவிஞர் இளையபாரதியால் இயக்கப்பெற்ற 'தென்பாண்டிச் சிங்கம்' தொலைக்காட்சித் தொடரில் 'உறங்காப்புலி' எனும் கதாபாத்திரமேற்று நடித்து முதல்வர் கலைஞரின் மனமார்ந்த பாராட்டைப் பெற்றவர். நடிகர் நாசர் இயக்கிய 'அவதாரம்' திரைப்படத்தில் 'பாசி' எனும் முக்கிய கதாபாத்திரமேற்று நடித்ததின் மூலம் சிறந்த நடிகராகப் பரவலாக அறியப்பட்டவர். இயக்குநர் ஷங்கர், பாலுமகேந்திரா, செல்வ ராகவன், மணிரத்னம், சேரன் போன்ற முன்னணி இயக்குநர்களின் பல வெற்றிப் படங்களில் நடித்தபடியே தனது கலைப்பயணத்தைத் தொடரும் இவர் 90க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் மட்டுமல்ல எண்ணிறைந்த குறும்படங்கள், சமூக அக்கறை கொண்ட விவரணப் படங்களிலும் நடித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.



முகவரி :
கே. பாலாசிங்,
33-ஏ, சைதாப்பேட்டை சாலை,
வடபழனி, சென்னை - 600 026.
செல் - 98414 75047



**மௌனிகா**

**சின்னத்திரை நடிகை**

காரைக்குடியைப் பூர்வீகமாகக் கொண்ட பச்சை தமிழச்சியான இவர் ரஜினி அவர்கள் நடித்த 'உன் கண்ணில் நீர் வழிந்தால்' என்ற படத்தின் மூலம் கலை வித்தகர் - கேமராக் கவிஞர் பாலுமகேந்திரா அவர்களால் திரை உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்.அன்னாரது துணைவி.

'யாத்ரா', 'நிரிக்ஷணா' ஆகிய படங்களில் சிறிய வேடங்களில் தோன்றிய பின், தேசிய விருது பெற்ற தமிழ்ப்படமான 'வண்ண வண்ணப் பூக்கள்' திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்தார். அதன் பின்னர் முழு நேர சின்னத்திரை நடிகையாக மாறிய அவர், 'ரகுவம்சம்', 'மர்மதேசம்', சின்னத்திரைக் காவியமான கலைஞரின் 'தென்பாண்டிச் சிங்கம்' மற்றும் சின்னத்திரையின் சிறந்த படைப்பென கருதப்படும் பாலுமகேந்திராவின் கதை நேரத்திலும் நடித்து மக்கள் மத்தியில் மரியாதைக்குரிய 'சிறந்த நடிகை' என்ற பெயரைத் தக்கவைத்துக் கொண்டுள்ளவர்.

இலக்கியம், நல்ல சினிமா - இயல்பான நடிப்பு ஆகியவற்றுடன் மௌனிகா ஆன்மீகத்திலும் அதிக ஈடுபாடுள்ளவர்.

முகவரி :
**மௌனிகா**
3/5, பத்மாவதி தெரு, திருமலை நகர்,
ராமாபுரம், சென்னை - 600 089.
தொலைபேசி - 24862115



## சி.ஜெ. பாஸ்கர்

சின்னத்திரை இயக்குநர்

'நம் நாடு' என்ற எம்.ஜி.ஆர். நடித்த திரைப்படத்தின் இயக்குநர் ஜம்புவின் புதல்வர்களில் ஒருவர் சி.ஜெ. பாஸ்கர். கே. பாலசந்தர், ஆர்.சி. சக்தி, டி. ராஜேந்தர் போன்ற இயக்குநர்களின் உதவி இயக்குநராக சுமார் 25 படங்களுக்கு பணிபுரிந்துள்ள பாஸ்கர் பணியாற்றிய முதல் தொலைக்காட்சித் தொடர் 'மர்மதேசம்'. 'சொர்ணரேகை', தொடர்ந்து 'சித்தி', 'அண்ணாமலை', 'பெண்' போன்ற தொடர்களை இயக்கிப் பிரபலமானவர்.

முகவரி :
**சி.ஜெ. பாஸ்கர்**
3, 52வது தெரு, 7வது அவின்யு,
அசோக் நகர், சென்னை - 600083.
தொலைபேசி - 24710338
செல் -98408 17669

## தீபா வெங்கட்

சின்னத்திரை குணசித்திர நடிகை

பதின்மூன்று வயதில் நடிக்கத் தொடங்கியவர் தீபா வெங்கட். இவரை அறிமுகப்படுத்தியவர் பிரபல திரைப்பட இயக்குநர் கே. பாலசந்தர். 'சித்தி', 'அண்ணாமலை', 'கோலங்கள்' போன்ற தொடர்களில் நடித்து பிரபலமான தீபா வெங்கட் 'பாசமலர்கள்', 'பாபா', 'தினந்தோறும்' போன்ற திரைப்படங்களிலும் நடித்தவர். விளம்பரப் படங்களையும் விட்டுவைக்காதவர். முன்னணி நடிகைகளுக்கு பின்னணிக் குரல் கொடுப்பவரும் கூட. இப்படி பன்முகத் தன்மை வாய்ந்த தீபா வெங்கட்டின் திறமையைப் பாராட்டி மைலாப்பூர் அகாதெமி இவருக்கு இரண்டு முறை விருதளித்துள்ளது.

முகவரி:
**தீபா வெங்கட்**
9/5, 2வது தளம், ஸ்ரீ கணேஷ் குடியிருப்பு,
சிவசங்கரன் தெரு, எம்.ஜி. சுவாமி நகர்,
விருகம்பாக்கம், சென்னை - 600 092.
தொலைபேசி - 23770797
செல் -98410 73689





## விடுதலை

**சின்னத்திரை கதை வசனகர்த்தா**

பத்திரிகையாளராகப் பணியாற்றிய கதை வசன கர்த்தா விடுதலை 'அச்சம் மடம் நாணம்', 'அவளும் பெண்தானே', 'கஸ்தூரி', 'வார்த்தை தவறிவிட்டாய்', 'கதை கதையாம் காரணமாம்', 'சந்தியா', 'குளிர்', 'கத்தியின்றி ரத்தமின்றி', 'மண்ணு' (மலையாளத் தொடர்) ஆகிய தொடர்களில் கதை வசனகர்த்தாவாகவும், இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். இவர் இயக்கிய 'கத்தியின்றி ரத்தமின்றி', 'வார்த்தை தவறிவிட்டாய்' ஆகிய தொடருக்காகச் சிறந்த இயக்குநருக்கான மயிலாப்பூர் அகாடமி விருதினையும் இவர் பெற்றுள்ளார்.

முகவரி :
**விடுதலை**
7/5, ஏ.வி.எம். காலனி, முதல் தெரு,
விருகம்பாக்கம், சென்னை - 600 092.
தொலைபேசி - 23760379
செல் - 98840 36354

முகவரி :
**அலெக்ஸ்**
தேவ்கா குடியிருப்பு, 4வது தளம்,
147(74), லஸ் சர்ச் ரோடு,
மயிலாப்பூர், சென்னை - 4.
தொலைபேசி - 24988879
செல் -98410 75360

## அலெக்ஸ்

தந்திரக் காட்சிக் கலைஞர்



மேஜிக் கலையைக் கற்றுத் தொடர்ந்து 24 மணி நேரம் இடைவிடாமல் திருச்சியில் மெகா மேஜிக் ஷோ நடத்தி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்தவர்.

53,256 மாணவ, மாணவியருக்கு ஒரே இடத்தில் மேஜிக் ஷோ நடத்தி சாதனை புரிந்து இன்னொரு முறை இரண்டாவது தடவையாக **LIMCO BOOK OF RECORD** புத்தகத்தில் இடம் பிடித்தவர்.

இதுவரை 75 திரைப்படங்களுக்கு மேல் வில்லனாக, குணசித்திர நடிகராக நகைச்சுவை நடிகராக நடித்துள்ளார். இதில் 2001 ஆம் ஆண்டில் 'மிட்டா மிராசு' படத்தில் நடித்ததற்காகச் சிறந்த வில்லன் நடிகராகத் தேர்வு செய்து தமிழக அரசு விருது வழங்கியது.



## டி.ஜி. தியாகராஜன்

சின்னத்திரை தயாரிப்பாளர்

டி.ஜி. தியாகராஜன் வீனஸ் பிக்சர்ஸ் அதிபர் திரு.டி. கோவிந்தராஜன் அவர்களின் புதல்வர். திரைத்துறையின் சாதனைத் திலகமான திரு.ஆர்.எம்.வீரப்பன் அவர்களால் மெருகேற்றப்பட்டு, சத்யா மூவீஸ் நிறுவனத்திற்காக, ‘இராணுவ வீரன்’, ‘மூன்று முகம்’, ‘தங்கமகன்’, ‘ஊர்க்காவலன்’, ‘பணக்காரன்’, ‘காக்கிச் சட்டை’, ‘காதல் பரிசு’, ‘புதிய வானம்’ போன்ற சுமார் 12 திரைப்படங்களின் தயாரிப்பில் ஈடுபட்டார்.

1982ஆம் ஆண்டு சத்ய ஜோதி பிலிம்சின் முதல் தயாரிப்பான ‘மூன்றாம் பிறை’ வெள்ளி விழா படமாக மாபெரும் வெற்றி கண்டது. ‘அப்பாவின் குல்லா’, ‘தம்பதிகள்’, ‘ஆரம்பம்’, ‘சம்மதம்’ போன்ற தொடர்களையும், ‘உயிரோவியம்’, ‘ஜெயிப்பது நிஜம்’, ‘கோபுரம்’, ‘வரம்’, ‘ஆனந்தம்’ போன்ற மெகாத் தொடர்களையும் தயாரித்திருக்கிறார்.

தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் கௌரவ செயலாளராகவும், பதவி வகித்திருந்த இவர் தற்போது சின்னத்திரைத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவராகவும் வெகு சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

முகவரி:
**டி.ஜி. தியாகராஜன்**
270/1, வி.டி.எம். காம்ப்ளக்ஸ், முதல் தளம்,
இலாயிட்சு சாலை,
இராயப்பேட்டை. சென்னை - 600 014.
தொலைபேசி - 28130161
செல் -92441 43060

# கலைமாமணி விருது வழங்கும் விழாவில் திறந்துவைக்கப்பட்ட மறைந்த கலைமேதைகளின் திருவுருவப் படங்கள்



மறைந்த உலகப் புகழ் பெற்ற நாட்டியக் கலைஞர்
சந்திரலேகா மற்றும் காமதேவா ஆகியோர் நவகிரகா
என்ற நாட்டியத்தில் தோன்றும் காட்சி



# கும்பகோணம் பானுமதி

பரதநாட்டிய ஆசிரியர்



**முரசொலி மாறன்**

திரைப்பட வசனகர்த்தா



**சந்திரலேகா**

பரதநாட்டியக் கலைஞர்



**கே.என். பக்கிரிசாமி பிள்ளை**

பரதநாட்டிய ஆசிரியர்



**கவிஞர் சுரதா**


திரைப்படப் பாடலாசிரியர்





பத்மினி ராமச்சந்திரன்
திரைப்பட நடிகை





**டி.ஆர். பாப்பா**

திரைப்பட இசையமைப்பாளர்



**செந்தாமரை**

திரைப்பட நடிகர்




**ஆர்.எஸ். மனோகர்**

நாடக நடிகர்



**எம்.ஆர். முத்துச்சாமி**


இசை நாடக நடிகர்



**முகவை ராஜமாணிக்கம்**
நாட்டுப்புறப் பாடல் ஆய்வாளர்



**மு.மு.இஸ்மாயில்**
இயற்றமிழ்க் கலைஞர்



**கே.பி. சிவானந்தம்**
வீணைக் கலைர்



**தஞ்சை ராமையா தாஸ்**
திரைப்படப் பாடலாசிரியர்



**ஸ்ரீவித்யா**
திரைப்பட நடிகை



**ஈ.வி.சரோஜா**
திரைப்பட நடிகை




**புரிசை கண்ணப்ப தம்பிரான்**
தெருக்கூத்துக் கலைஞர்



சந்தியாவந்தனம் சீனிவாசராவ்
குரலிசைக் கலைஞர்

## பொற்கிழி (ரூ.15,000/ -பணமுடிப்பு) பெறும் கலைஞர்கள் பட்டியல்



கலைமாமணி திரு. **சித்தார்த்தா**

(அரவிந்த் சித்தார்த்தா) சென்னை

திரைப்பட இசையமைப்பாளர்



கலைமாமணி திருராமேஸ்வரம்

**திரு.டி.ஆர். கிருஷ்ணமூர்த்தி**

இசை நாடக மிருதங்கக் கலைஞர்



கலைமாமணி திரு. **ஆர்.எம். இராமையா**

திண்டுக்கல்

இசை நாடக மிருதங்கக் கலைஞர்

## சிறந்த நாடகக் குழு
## ஸ்ரீலலிதாலயா ஸ்டேஜ்

**ஸ்ரீஹரி**, நாடகக் கலைஞர். பல நாடகக் குழுக்களின் மேடை நாடகங்களில் கதாநாயகனாக 1971-லிருந்து நடித்துக் கொண்டிருந்தார். 1980-களில் திரு. ஹெரான் ராமசாமியின் 'ஹெரான் தியேட்டர்ஸ்' மூலம் புராண, இதிகாச நாடகங்களில் மகாவிஷ்ணு,கிருஷ்ணர், ராமர் வேடங்களில் நடிக்கத் தொடங்கினார். பிறகு ஹெரானிடமிருந்து திரு. ருத்திராபதி விலகி ஏ.பி.என். ஆர்ட்ஸ் என்ற கலைக்குழுவைத் துவக்கியபோது அவருடன் இணைந்து மகாவிஷ்ணு, கிருஷ்ணர் வேடங்களில் நடிக்க, அவரது நாடகங்களில் ஒன்றான 'அஸ்வத்தாமா' நாடகத்தில் கிருஷ்ணர் வேடத்தில் நடித்ததின் மூலம் மிகவும் பிரபலமானார்.

1989இல் ஸ்ரீலலிதாலயா ஸ்டேஜ் என்ற நாடகக் குழுவைத் துவக்கினார்.

இவர்களது ஸ்ரீலலிதாலயா ஸ்டேஜ் கலைக்குழுவின் மூலம் நல்ல தமிழில் ஸ்ரீசக்ரதாரி, ஸ்ரீகுருவாயூரப்பன், ஜெகதல பிரதாபன், ஸ்ரீவேங்கடேசா மற்றும் பிரதோஷ நாயகன் நாடகங்களை அதிக பொருட்செலவில் பிரம்மாண்டமாகத் தயாரித்து, வழங்கி அனைவரது பாராட்டுகளையும் பெற்றதோடு பல விருதுகளையும் பெற்றிருக்கிறார். இவர்கள் கலைக்குழுவின் மூலம் சென்னை தொலைக்காட்சியில் 1996இல் பிரபல திரைப்பட நடிகர் (மறைந்த) ஜெமினி கணேசன் அவர்களை முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்க வைத்து தீண்டாமைக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட 'ஸ்ரீகிருஷ்ண உதங்கர்' என்ற புராண தொலைக்காட்சிப் படம் தயாரித்து வழங்கியிருக்கிறார். அது பல தொலைக்காட்சிகளில் பலமுறை ஒளிபரப்பப்பட்டு வரவேற்பு பெற்றது. சென்னை தொலைக்காட்சி நிலையத்திற்காக இலக்கிய நாடகங்கள் 'பொங்கிவரும் பெருநிலவு', கம்பரின் தீர்ப்பு, மற்றும் உறவு பிரிவும் ஆகியவற்றை ஸ்ரீ லலிதாலயா கலைக்குழுவின் மூலம் படைத்துச் சிறப்பான முறையில் வழங்கியிருக்கிறார்.

முகவரி:
**ஸ்ரீஹரி,**
14, கிரசண்ட் பார்க் அபார்ட்மெண்ட்,
22, காமராஜர் தெரு, (காந்தி நகர்),
சாலிகிராமம், சென்னை - 600 093.
போன்: 23620230, 94442 14515

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

சமூக விஞ்ஞானி என்று கொண்டாடப்படும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 1955ஆம் ஆண்டு இலக்கியத்திற்காக சாகித்ய அகாடமியும், ஓவியத்திற்காக லலித்கலா அகாடமியையும் இசை நாட்டியம் மற்றும் நாடகத்திற்காக சங்கீத் நாடக அகாடமியுயம் 1955ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார்கள். இந்த அமைப்பு தமிழகத்தில் சங்கீத சங்கம் என்ற பெயரில் இயங்கி வந்தது. 1973ஆம் ஆண்டு நம் தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் இந்த அமைப்பிற்கு 'இயல், இசை, நாடக மன்றம்'' என்று பொருத்தமான பெயரைச் சூட்டினார்கள்.

1973ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது. மாநில அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

**1. கலைப்பணித் திட்டங்கள்**

மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், நலிந்த நிலையில் வாழும் புகழ்பெற்ற கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குதல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதி உதவி வழங்குதல், தமிழ்நாட்டில் பல்வேறு கலை நிறுவனங்களின் மூலம் கலை நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்பளித்து அதன்மூலம் திறமைமிக்க புத்திளங்கலைஞர்களுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்தல், கலைத்துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்குச் சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களுக்குக் கலைமாமணி என்ற மாநில விருது வழங்கிச் சிறப்பு செய்தல், தமிழ்ப் பண்பாட்டினைச் சித்தரித்துத் தயாரிக்கும் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நாடகத் தயாரிப்பு நல்கை வழங்குதல், கலை மேதைகளின் நினைவு விழாக்களை நடத்தும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல், கலைஞர்கள் பயன்பெறும் வண்ணம் பல்வேறு கலைவிழாக்கள் நடத்துதல், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலை அம்சங்களை வருங்காலச் சந்ததியினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல், புகழ்பெற்ற முதுபெரும் இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபுவழிக் கிராமியக் கலைகள் மற்றும் கவின்மிகு நுண்கலைகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் ஆகிய முக்கியப் பணிகளை இயல் இசை நாடக மன்றம் செம்மையுறச் செய்து வருகின்றது.

**2. கலைமாமணி விருது வழங்குதல்**

கலைத்துறையின் செயற்கரிய சேவை செய்து புகழ்பெற்ற கலைஞர்களைப் பாராட்டிச் சிறப்பு செய்யும் முகத்தான், அவர்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலைமாமணி விருது வழங்குகிறது. இதுவரை, 1382 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது. கலைமாமணி விருது வழங்கும் விழாவில், இதுகாறும், 306 மறைந்த புகழ்பெற்ற கலைமேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. கலைமாமணி விருது வழங்கும் விழாக்களில் வறிய நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்குப் பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வகையில் ரூ.1,000/- வீதம் 147 கலைஞர்களுக்கும், ரூ.5,000/- வீதம் 17 கலைஞர்களுக்கும், ரூ.10,000/- வீதம் 13 கலைஞர்களுக்கும், ரூ.15,000/- வீதம் 19 கலைஞர்களுக்கும், ஆகமொத்தம் 196 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது, கலைவளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயல்பட்டு வரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும் வகையில், இதுவரை 26 கலை நிறுவனங்களுக்கும், 17 நாடகக் குழுக்களுக்கும் கேடயங்கள் மற்றும் கழற்கேடயங்கள் வழங்கப்பெற்றுள்ளன.

**3. நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்**

வாழ்நாள் முழுவதும் கலையையே தொழிலாகக் கொண்டு அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் சிறந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.500/- நிதியுதவியாக வழங்கப்பட்டு வந்தது. இந்த நிதியுதவித் தொகையினை 2006ஆம் நிதியாண்டிலிருந்து ரூ.500/- இல் இருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தி முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ், 2006-2007ஆம் ஆண்டில் புதியதாக 500 நலிந்த கலைஞர்களுக்குத் திங்களொன்றுக்கு ரூ.1,000/-வீதம் நிதியுதவி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை உள்ளடக்கி, இதுவரை மொத்தம் 8563 நலிந்த கலைஞர்கள் நிதியுதவி பெறும் வகையில் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**4. மறைந்த புகழ்பெற்ற கலைஞரின் குடும்பத்தாருக்குக் குடும்ப பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்**

இத்திட்டத்தின்கீழ் ரூ.2,000/- வீதம் 88 குடும்பங்களுக்கும், ரூ.3,000/- வீதம் 77 குடும்பங்களுக்கும், ரூ.5,000/- வீதம் 81 குடும்பங்களுக்கும், ரூ.6,000/ வீதம் 72 குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 318 மறைந்த கலைஞர்களின் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

**5. மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம்**

இந்திய திருநாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை வலுவாக்கவும் மாநிலங்களுக்கிடையே கலை பண்பாட்டு மரபினைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், இந்திய அரசின் சார்பில் புதுதில்லி, சங்கீத நாடக அகாதெமியும், தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும் இணைந்து மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை தமிழகத்திற்கு 81 வெளி மாநிலக் கலைக்குழுக்கள் வருகை புரிந்துள்ளன. 84 தமிழகக் கலைக் குழுக்கள் வெளிமாநிலங்களுக்குச் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளது.

**6. திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்**

வாய்ப்பாட்டு மற்றும் கருவியிசை, பரதநாட்டியம் ஆகிய கலைத்துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளங்கலைஞர்களை அறிமுகம் செய்யும் வண்ணம் தமிழகத்தில் செம்மையுடன் இயங்கி வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மன்றம் நிதியுதவி செய்து அதன் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ஊக்குவித்து வருகின்றது. 2006 - 2007 ஆம் நிதியாண்டில் 36 இளம் கலைஞர்களைத் தெரிவு செய்து நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளதை உள்ளடக்கி, இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1760 இளம் கலைஞர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**7. கிராமியக் கலைஞர்களுக்கு / கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்**

ஊரகக் கலைஞர்களுக்கும் கலைக் குழுக்களுக்கும், இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க மன்றம் நிதியுதவி வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞருக்கு ரூ.750/- வீதம் தொகையும் ஒவ்வொரு கலைக்குழுவிற்கு ரூ.2,500/- தொகையும் நல்கையாக வழங்கப்படுகிறது. இதுவரை 1425 ஊரகக் கலைஞர்களுக்கும் /கலைக்குழுக்களுக்கும் பயன்துய்த்துள்ளனர்.

**8. புதிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வாங்குதல்**

தமிழ்க்கலை மற்றும் பண்பாட்டைப் பின்னணியாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாடகங்கள் தயாரித்திட நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 42 நாடகங்கள் மன்ற நல்கையுடன் உருவாக்கி மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**9. புதிய நாட்டிய - நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்**

தமிழ் இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு தமிழில் சிறந்த நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யும் நாட்டிய - நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 13 நாட்டிய - நாடகங்கள் மன்ற நல்கையில் தயாரிக்கப்பட்டு மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**10. அரிய கலை நூல்களுக்கு மானியம் வழங்குதல்**

கலைநூல்களைப் பதிப்பித்து வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 103 நூல்கள் மன்ற நல்கையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

**11. கலைவிழாக்கள்**

மறைந்து வரும் நம் மரபு வழிச் சிறப்புமிக்க ஊரகக் கலைகளின் சிறப்பினைத் தற்போதைய தலைமுறையினர் கண்டுணரும் வண்ணமும், தொழில் வாய்ப்பின்றி வாழ்ந்து வரும் ஊரகக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் நல்கும் வண்ணமும், இயல் இசை நாடக மன்றம் பல்வேறு கலைவிழாக்களையும், ஊரகக் கலைவிழாக்களையும் நடத்தி வருகின்றது,

இவ்வகையில், 2006, ஜூன் திங்கள் 30 மற்றும் ஜூலைத் திங்கள் 1ஆம் தேதியில் கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற கோடை விழாவில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளையும், திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்ற சாரல் திருவிழாவில் 2006, ஆகஸ்ட் திங்கள் 3 முதல் 5 ஆம் தேதி வரையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும், 16.8.2006 தேதியில், சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயிலில் சமயச் சொற்பொழிவு நிகழ்ச்சியையும் மன்றத்தின் சார்பாக நடத்தப்பெற்று. 11.9.2006 தேதியில் சென்னையில் பாரதி விழாவினையும், இமாச்சலப்பிரதேசம் குல்லு பள்ளத்தாக்கில் நடைபெற்ற தசரா கலைவிழாவில், 5.10.2006 தேதியில் கிராமியக் கலை நிகழ்ச்சியையும், 2006, திசம்பர் திங்கள் 22 முதல் 24ஆம் தேதிவரை திருமதி. அ. மங்கை அவர்களின் இயக்கத்தில் கவிஞர் இன்குலாப் அவர்களின் ஔவை, மணிமேகலை, குறிஞ்சிப்பாட்டு ஆகிய நாடகங்கள் நடத்தப்பட்டன.

டாக்டர் கலைஞர் அவர்களின் கலை இலக்கியப் பணிகளைச் சித்தரித்து, ''கலைஞர் படைப்பரங்கம்'' சென்னையில் 2007, சனவரித் திங்கள், 10 முதல் 21ஆம் தேதிவரை நடைபெற்ற 30வது புத்தகத் திருவிழாவிலும், அதனைத் தொடர்ந்து கோவை, மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்ற புத்தகத் திருவிழாக்களிலும் அமைக்கப்பட்டது.

சென்னையில், 2007, மே திங்கள் 5 முதல் 9ஆம் தேதி வரை ஐம்பெரும் கலைவிழாவும், 28.7.2007 தேதியில் நாட்டுப்புறக் கலைவிழாவும் மன்றத்தால் நடத்தப்பட்டது.

மேலும் தொன்மைச் சிறப்பு மிக்க தமிழ்க் கலைகளைப் பிற மாநிலத்தவர் அறிந்துகொள்ளும் வண்ணம் பிற மாநிலங்களில் தமிழகக் கலை விழாக்களையும் மன்றம் நடத்தி வருகின்றது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கும், அதன் பல்வேறு கலைப்பணிகளுக்காக நல்கை வழங்கி வருகின்றது.

**அ. ஆவணப்படம் தயாரித்தல்**

தமிழ் இசை மரபு பற்றிய ஓர் ஆவணப்படம் தயாரிக்கப்படும். இதில் சீர்காழி மூவரிலிருந்து ராஜரத்தினம் பிள்ளை வரையிலான வரலாற்றைச் சித்தரிப்பதாக இது அமையும்.

**ஆ. முத்தமிழ் முகாம்**

பூனா திரைப்படக் கல்லூரியில் ஆண்டுதோறு் கோடை விடுமுறையில் திரைப்பட ரசனை பயிற்சி வகுப்பு நடத்துவதுபோல், இயல், இசை, நாடகத்திற்கான முகாம் ஒன்றை மூன்று துறைகளிலும் உள்ள சிறந்த கலைஞர்கள், படைப்பாளிகளைக் கொண்டு நடத்தப்படும்.

**இ. நாடகக் கலைஞர்களின் புகைப்படம், குரல்கள் மற்றும் நாடக நிகழ்வுகளைச் சேகரித்துத் தொகுத்து ஆவணமாக்கிப் பாதுகாத்தல்**

நாடகக் கலைஞர்களின் புகைப்படங்கள், கலைஞர்களின் குரல்கள் மற்றும் நாடக நிகழ்வுகளைப் பதிவு செய்து பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் புகழ்பெற்ற கலைஞர்கள் பயன்படுத்திய ஆடை அணிகலன்கள், மேடைப் பொருட்கள், காட்சி அமைப்புகளையும் சேகரித்துப் பாதுகாத்து பார்வையாளர்கள் காணும் வண்ணம் காட்சிப் பொருளாக வைக்கப்படும்.

**ஈ. அகில இந்திய அளவில் புகழ்பெற்ற கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல்**

தமிழகத்தைச் சேர்ந்த கலைஞர்களுக்கு விருது வழங்குவது போல், அகில இந்திய அளவில் புகழ்பெற்ற கலைஞர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் தமிழக அரசின் சார்பில் விருதுகள் வழங்கப்படும்.

**உ. கலைஞர்கள்/கலைக்குழுவினர் தங்குவதற்குத் தகுந்த விருந்தினர் இல்லத்தை மன்ற வளாகத்தில் கட்டுதல்**

பல்வேறு கலைப்பணிகள் குறித்து சென்னைக்கு வருகை தரும் அனைத்து தரத்து கலைஞர்களுக்கும் தங்குவதற்கு உகந்தவாறு மன்ற வளாகத்தில் 3000 சதுர அடியில் ஒரு கட்டடம் கட்டுவதற்கு ஆவனச் செய்யப்படும்.

**ஊ.** நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தில் 2007 - 2008 ஆம் நிதியாண்டில் புதிதாக 500 கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

கடந்த (2006-2007) நிதியாண்டின் மானிய கோரிக்கையின்போது புதிதாக 500 நலிந்த கலைஞர்களுக்கு அவர்கள் வாழ்நாள் வரை திங்கள்தோறும் ரூ.1,000/- வீதம் நிதியுதவி வழங்க அறிவிப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து 500 கலைஞர்களுக்கு நிதியுதவி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது. அதேபோல் நடப்பு (2007-2008) நிதியாண்டில் புதிதாக 500 நலிந்த கலைஞர்களுக்கு திங்கள்தோறும் தலா ரூ.1,000/- வீதம் நிதியுதவி ஒப்பளிக்க ஆவனச் செய்யப்படும்.



மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் தலைமையில்

2.07.2006 அன்று நடந்த

சிலப்பதிகார நாட்டிய விழா





11.08.2007 அன்று மதுரை 2 வது புத்தகத் திருவிழாவில்
கலைஞர் படைப்பரங்கைத் திறந்து வைத்து பார்வையிடும்
திரு. மு.க. அழகிரி அவர்கள் உடன் திருமதி காந்தி அழகிரி, கவிஞர் கனிமொழி எம்.பி.



சென்னை





கோவை



மதுரை

இந்தக் கலைஞர் படைப்பரங்கிற்குள் நீங்கள் ஒரு சிறகாக நுழைந்தால்
பறவையாக வெளியே வருவீர்கள்.

- கல்யாண்ஜி (வண்ணதாசன்)